பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 28 திங்கட்கிழமை 14.11.2022 கதிர் 09

### இனிது ரகசியம் அல்ல!

எனக்கு மிக ஆச்சரியமாக உள்ளது, என் தமிழ் எழுத்து நடை குறித்து ஒரு மிதப்பான எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. ஆனால், அது அவ்வ எவுகுழப்பமாகவாஇருக்கின்றது என்று சிந்திக்கும் நிலை இப் போது வந்துள்ளது. 2

# சம்ஷ்டியே என ஒரு குரலில் பேசு வாருங்கள்! தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டமைப்பு அழைப்பு

## சம்பந்தன் வீட்டில் நாளை மாலை ஒன்று கூடல்

சம்ஷ்டியே என ஒரு குரலில் பேசு வாருங்கள் எனத் தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு நேற்று மாலை மின்னஞ்சலில் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்பதை, வடகிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் ஒன்றாக வலியுறுத்த வேண்டிய சந்தர்ப்பமொன்று எழுந்துள்ளது. 2

# கூட்டமைப்பு ஒரு விபச்சார வீடு சம்பந்தன் பதவி விலகவேண்டும்

## வினோ எம்.பி. வவுனியாவில் காட்டம்



(வவுனியா நிருபர் கி.வசந்தரூபன்)

வவுனியா, நவம்பர் 14

* கூட்டமைப்பு ஒரு (அரசியல்) விபச்சார இல்லமாக செயற்படுவதாக நான் குறை கூறினேன். அது உண்மையே.
* இரா.சம்பந்தன் உட்பட அனைத்துத் தமிழ் தேசிய தலைவர்களும் தோற்றுப் போன தலைவர்களே. அவர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோரதராதலிங்கம் தெரிவித்துள்ளார். 2

# விகிதாசாரத் தேர்தல் இல்லாவிட்டால் விக்கி இன்று எம்.பியே இல்லையாம்!

## தாமேதான் எம்.பி. என்கிறார் சரவணபவன்



விகிதாசார தேர்தல் இல்லாவிட்டால் விக்கினேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. நானே நாடாளுமன்ற உறுப்பினர் என முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். 12

# யாழில் 'முதல்வர் கிண்ண' சதுரங்கம் ஏற்பாடு சீரின்மையால் இடைநிறுத்தம்

## பெற்றோர் பெரும் விசனம், எரிச்சல்


யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட முதல்வர் கிண்ணத்துக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 12

# 'சாம்பலில் இருந்து மீண்டெழும்' கூட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியது மொட்டு அணி

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி பொது ஜன பெரமுனவினால் 'சாம்பலில் இருந்துமீண்டெழுவோம்;ஒன்றிணைந்து எழுவோம்' என்ற தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கட்சி 13

# அதிகாலை வேளை வாளுடன் வீட்டுக்கு முன்னால் அடாவடி!



யாழ்ப்பாணம் - கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் இன்று அதிகாலை 4 மணியளவில் வீடு ஒன்றின் முன்பாக அடாவடி செய்த நபர் 13

# 'ரி20' - உலக கிண்ணம் இங்கிலாந்து அணிக்கு!

ரி20 உலக கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றுள்ளது.



நேற்றைய இறுதி போட்டியில் இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் 13

# பெண் பொலிஸின் கழுத்தைப் பிடித்து தள்ளிய பொலிஸ் அதிகாரி சிக்கலில்!

இரு பெண் பொலிஸாரின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிய பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இரு பெண்களால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட



பாதயாத்திரையை பாணந்துறையில் தடுக்கும் நோக்கில், 13

# சரத் வீரசேகராவும் ரணிலுடன் ஐக்கியம்

உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னாள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்தே சரத் வீரசேகர பணியாற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஜனாதிபதியினால் 13

# இன்று பட்ஜெட்!



நிலையான மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2023 வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார். 13

# வெளிநாட்டுப் பயிற்சிக்கு யோஷித தெரிவானமை குறித்து விசாரணை

கொழும்பு, நவ.14

மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ கடற்படையில் வெளிநாட்டு பயிற்சிக்காக எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார் என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய வேளை அவர் எவ்வாறு வெளிநாட்டுப் பயிற்சிக்காகத் 13

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

42 வருட தமிழ்ப் பத்திரிகை அனுபவத்தின் பின்னரும், தமிழில் புரிந்து கொள்ள முடியாத வகையில் - விளங்கிக் கொள்ள முடியாத விதத்தில் - நான் எழுதுகிறேன் என்றால், நான் உண்மையில் ஓர் ஊடக வியலாளன் அல்லன்.

நேற்று ரெலோ எம்.பி. வினோ வவுனியா நிகழ்வு ஒன்றில் என் பெயர் குறிப்பிடாமல் என்னைச் சுட்டிச் சொன்ன விடயங்களைப் பார்த்தபோது, ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கூடப் புரிந்து கொள்ள முடியாத விதத்தில் அபத்தமாகத்தான் நான் எழுதுகிறேனோ என்ற சந்தேகம் எனக்கு உண்மையில் வந்து விட்டது. அதனால்தான் வாசகர்களிடம் இந்த முறையீடு. அவர்கள்தான் சரியாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

வினோ எம்பி குறிப்பிட்டவை, வார்த்தைக்கு வார்த்தை இன்று முற்பக்கத்தில் தலைப்புச் செய்தியாக முழுமையாகப் பிரசுரமாகியுள்ளன. எனினும் என் தொடர்பில் அவர் குறிப்பிட்டவை வருமாறு:-

"....ஒரு நேரத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் சம்பந்தன் ஐயாவின் தலைமையில் வவுனியாவில் கூடியிருந்த வேளை, அப்பொழுது யாழ் ஊடகவியலாளர் முன்னாள் சிரேஷ்ட போராளிகளை அழைத்து வந்து இந்தத் தேர்தலில் எங்களையும் இணைத்துப் போட்டியிட வேண்டும், போராளிகளுக்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்று கேட்ட போது, ஒரேயடியாக அதற்குரிய தகுந்த காரணம் இப்போது இல்லை, போராளிகளை இப்போது இணைக்க முடியாது என சம்பந்தன் ஐயா சொல்லிவிட்டார். பிறகு அதே ஊடகம் அல்லது அதே ஊடகவியலாளர் எழுத்துக்களெல்லாம் இந்தப் போராளிகளையாரோ தவறாக வழிநடத்துகிறார்களாம். அன்று தான் செய்கின்ற போது சரியாகப் பட்டது, இன்று (அவருக்கு) பிழையாகப்படுகிறது. அந்த ஊடகவியலாளரை யாரோ பிழையாக வழி நடத்துகிறார்களா?" - இப்படி கூறினார் வினோ.

முன்னாள் போராளிகளின் அந்த அமைப்பைத் தோற்றுவித்து 'ஜனநாயக போராளிகள் கட்சி' என்ற பெயரைத் தேர்ந்து சூட்டியவன் நானே. அதன் ஸ்தாபகன் நான் என்றும் கூட உரிமை கோர முடியும். ஆங்கிலத்தில் Crusaders for Democracy என்று அதற்குப் பெயரும் வைத்தேன். அவர்களை ஒரு கட்டமைப்பாக ஒழுங்குபடுத்தும் ஏற்பாடு படையினரின் உச்சக் கெடுபிடி இருந்த கடந்த தசாப்தத்தின் நடுப்பகுதியில், என் யாழ்ப்பாண வீட்டில்தான் நடந்தது. அதற்கான அழைப்பாளரும் நானே. ஆரம்ப ஒழுங்கு விதிகளைக் கூட நானே வரைந்து கொடுத்தேன். தோற்றுவிப்பது மட்டுமே என் பணி, அதில் நான் தொடர்ந்து பயணிக்க மாட்டேன் என்பது அதன் ஸ்தாபன உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும்.

நேற்றும் என் பத்தியில் *'நான் ஒரு விதை அப்போது ஊன்றினேன். எனினும் அதன் பெயரில் நான் அரசியல் செய்ய விரும்பவில்லை. அது முளைத்து அதுவாக வளர ஆசீர்வதித்து நின்றேன். என் ஆதரவு, ஆசீர்வாதம், உரித்து அதற்கு உண்டு'* என்றுதான் நான் நேற்றும் குறிப்பிட்டு இருந்தேன்.

இரண்டொரு நாள்களுக்கு முன்னர் கனடா வானொலி ஒன்றுக்கு அக்கட்சியின் தலைவர் வேந்தன் செவ்வியளித்தார். அதில் என்னைப் பற்றிக் கேட்கப்பட்டது. இதையே அவர் பதிலாகத் தந்திருந்தார்.

அப்படி இருக்கையில் 'இந்த ஊடகவியலாளரின் எழுத்துக்கள் எல்லாம் இந்த போராளிகளை யாரோ தவறாக வழிநடத்துகின்றார்களாம்(என்று உள்ளன)' என்று கூறுகின்றார் வினோ எம்.பி.

எதை வாசித்து விட்டு வந்து, அவர் இப்படிக் கற்பனையில் பேசுகின்றார் என்று எனக்குப் புரியவில்லை.

எனது எழுத்துக்களில் - எவற்றிலும் - நான் ஜனநாயகப் போராளிகள் கட்சியை விமர்சித்தவன் அல்லன். அதற்குரிய பக்குவ நிலைக்கு அக்கட்சி இன்னும் வளர்ந்து விடவில்லை என்பது எனது ஆதங்கம். அதனால் அக்கட்சி நிர்வாகிகள் மீதான என் அன்பு உரிமை கருதி, அவர்களை அழைத்து செயல் திறனாக இயங்காதமைக்காக தனிப்பட்ட முறையில் கடிந்து கொண்டமை - கொள்கின்றமை - உண்டு. ஆனால் வினோ எம்.பி. கற்பனையில் கூறுவது போல அவர்களை யாரோ தவறாக வழி நடத்துகிறார்கள் என்று கூட நான் அவர்களிடம் கூறியவன் அல்லன். எழுதியவனும் அல்லன்.

முன்னாள் போராளிகளுக்கான நேற்றைய (வவுனியா) முயற்சியைக் கூட நான் வெளிப்படையாக வரவேற்றேன். அந்த முயற்சிக்கு எனது முழு ஆதரவு உண்டு என்றேன். போராளிகளுக்காக ஆயிரம் மலர்கள் மலர்ந்தாலும் நல்லது என்பேன் என்றேன்.

'இப்போது புதுவிதைக்கு முளை போடுபவர்கள் அப்படி (என்னைப் போல) ஆசீர்வதித்து உதவுவதுடன் நின்றால் நல்லது - அதனைத் தமது அரசியலுக்கான கருவியாக்காமல்' என்றுதான் நேற்று எழுதியிருந்தேன்.

இந்தத் தமிழ் விளங்காமல் பிதற்றியிருக்கின்றார் வினோ எம்.பி.

அப்படியாயின், என் தமிழ் எழுத்தில் தான் ஏதோ பிழை போலும். வாசகர்களே அதனை முடிவு செய்து கொள்ளட்டும்.

முன்னாள் போராளிகளை 2015 இல் நான் சம்பந்தரிடம் கூட்டிச் சென்றமை குறித்தும் வினோ குறிப்பிட்டிருக்கின்றார். அப்போது அந்தப் போராளிகளுக்குப் போட்டியிட இடம் கொடுக்க முடியாது என்று சம்பந்தன் கூறிய கருத்துத் தொடர்பிலும் வினோ எம்.பி. தவறான வழிநடத்தலை முன்னெடுத்திருக்கின்றார். அதனால் அதனையும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

நான் தமிழ் மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஓரிரு முன்னாள் போராளிகள் என எட்டுப் பத்துப் பேரை அழைத்துச் சென்றிருந்தேன். சம்பந்தனுக்கு பக்கத்தில் இருபுறமும் மாவை, சுரேஷ், சித்தார்த்தன், செல்வம் ஆகிய நால்வரும் அமர்ந்திருந்தனர்.

அந்தப் போராளிகள் தரப்புக்கு இடம் அளிக்க முடியாது என்பதற்கு சம்பந்தன் அன்று கூறிய பிரதான காரணம் விஷமத்தனமானது.

"உங்கள் மத்தியில் இருந்துதான் கருணா வந்தார். உங்கள் மத்தியில் இருந்துதான் பிள்ளையான் வந்தார். உங்கள் மத்தியில் இருந்து தான் கே.பி. வந்தார். நீங்களும் இப்போது புலனாய்வாளர்களின் ஏற்பாட்டில் வந்திருக்கின்றீர்கள் என்று தமிழ் மக்கள் கருதுகின்றார்கள்" - என்றார் சம்பந்தன்.

அதன் பின்னர்தான் அந்தப் போராளிகளுக்கு, அவர்களின் அமைப்புக்கு ஓர் அரசியல் அங்கீகாரத்தை - தளத்தை - ஏற்படுத்துவதற்காக தேர்தலில் சுயேச்சையாக நிற்கும் முடிவை அவர்களுடன் சேர்ந்து நான் எடுத்தேன். வன்னியில் போட்டியிடவே அவர்கள் விரும்பினர். ஆனால், அங்கு ஆயிரம் வாக்குகளைப் பிரிப்பது கூட தமிழர் பிரதிநிதித்துவத்திற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால், நான் அதற்கு அனுமதிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் போட்டியிடுவதன் மூலம் ஜனநாயகப் போராளிகள் கட்சியை அடையாளப்படுத்த ஏற்பாடு செய்தேன்.

தேர்தல் முடிந்த கையோடு, அது வரையான வரவு - செலவுகள், நான் இந்த முயற்சிக்காக செலவிட்ட தொகை பற்றிய விவரங்களை எல்லாம் பட்டியலிட்டு ஆவணங்களோடு ஒப்படைத்து, அவர்கள் வழி தொடர வாழ்த்தினேன். எனினும் தங்கள் ஆலோசனைக்கு என்னை கலப்பதற்கு அவர்கள் பின்னிற்பதில்லை.

இவற்றை ஒட்டிய இன்னொரு விடயமும் உண்டு. இதுவரை நான் கூறியவை 2015இல் நடந்தவை.

2020 நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் சம்பந்தன் ஐயாவுக்கு எதிராக முன்னாள் திருகோணமலை மாவட்ட புலிகளின் தளபதி ரூபனை, நீதியரசர் விக்னேஸ்வரன் நிறுத்தினார். ஆடிப் போய்விட்டார் சம்பந்தன். அந்தத் தேர்தலில் ஒரு நூறு வாக்கு வித்தியாசத்தில்தான் சம்பந்தன் தலை தப்பியது.

பிரசார காலத்தில் நிலைமையின் விபரீதத்தை புரிந்த சம்பந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியினரையும் அழைத்து, திருகோணமலையில் தங்க வைத்து, தமக்காக முழுப் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடுத்தினார்.

அச்சமயம் சம்பந்தன் ஐயா வீட்டில் ஓர் ஊடக சந்திப்பு. 2015 தேர்தலுக்கு முன் நான் கூட்டிச் சென்ற முன்னாள் போராளிகள் ஒருவர் தவறாமல் அனைவரும் சம்பந்தனின் இருபக்கமும் இருந்தனர். இரண்டொரு போராளிகள் மேலதிகமாகவும் காணப்பட்டனர். 2015 இல் வவுனியாவில் அவரிடம் நான் அழைத்துச் சென்ற அந்த அணியில், நான் மட்டுமே அங்கு 'மிஸ்ஸிங்'!

அப்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு முகத்தில் அடித்த மாதிரி - சம்பந்தனுக்கு ஆதரவாக - பதில் தந்தார் போராளிகளின் பேச்சாளர். அந்தப் பதிலில் மகிழ்ந்த சம்பந்தன் தம்மை மீறி கைதட்டினார்.

அதனைக் காணொலியில் பார்த்த நான் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவரையும், செயலாளரையும் தொலைபேசியில் அழைத்து ஒரு கேள்வி கேட்டேன்.

"டேய்...தம்பிமார்... அன்றைக்கு வவுனியாவில் சம்பந்தனைச் சந்திக்க நான் உங்களைக் கூட்டிப் போன போது எங்களை 'அரச புலனாய்வாளர் அணி' என்றார் சம்பந்தன். அந்த அணியில் என்னைத் தவிர, நீங்கள் எல்லோரும் சம்பந்தனுடன் இப்போது பக்கத்தில் இருக்கிறீர்கள். அவர் உங்களைக் கைதட்டி இப்போது சிலாகித்துப் பாராட்டுகின்றார். அப்படி என்றால் நானா அந்த புலனாய்வாளர்களின் ஆள்?" - என்றேன். அவர்கள் பதில் தர முடியாமல் சிரித்தார்கள்.

என் அந்தக் கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. சம்பந்தன்தான் பதில் கூற வேண்டும்.

எது, எப்படியோ... இந்தப் பட்டறிவை வாசகர்களுடன் நான் பகிர வினோ எம்.பியின் குசும்புத்தனமான பேச்சு உதவியது என்பது மகிழ்ச்சிதான்.

**- மின்னல் -**

## சம்ஷ்டியே என ஒரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது கட்சிகளுக்கிடையில் பல்வேறு பேதங்கள் இருந்தாலும் எமது மக்களின் அடிப்படை அபிலாஷையை வெளிப்படுத்த வேண்டிய இந்த வேளையில் கட்சி வேறுபாடுகளை புறம் வைத்து விட்டு அதனை உரத்துக்கூற அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

இதற்காக நாளை செவ்வாய் கிழமை நவம்பர் 15ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் கொழும்பு இல்லத்தில் ஒன்று கூடுமாறு கட்சித் தலைவராகிய உங்களை அன்போடு அழைக்கிறோம். காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு நீங்கள் சமூகம் தருவீர்கள் என்று நம்புகிறோம். - என்று உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக தெரியவந்தது.

## கூட்டமைப்பு ஒரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற முன்னாள் போராளிகளின் நலன் பேணும் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நிகழ்வு தொடர்பில் ஆரம்பத்தில் பல சந்தேகங்கள் இருந்தன. காலையில் எழுந்தவுடன் இரண்டு, மூன்று பத்திரிகைகள் பார்ப்பது வழமை. யாழ்ப்பாணப் பிராந்திய பத்திரிகை ஒன்று, இங்கு இரண்டு பேரை முதன்மைப்படுத்தி அவர்களின் தயார்ப்படுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற இருக்கின்றது என்று ஆசிரியர் தலையங்கம் அல்லது வேறு பந்தியில் எழுதப்பட்டிருந்தது. அதையும் பார்த்தேன். எனக்கு இது தேவையா? இதில் அரசியல் விளையாடப் போகிறதா? இதில் உள்ள சாதக, பாதகம் பற்றி இரண்டு பக்கமும் யோசித்து விட்டுத்தான் இந்த நிகழ்வில் கலந்து கொண்டேன்.

ஒரு நேரத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் சம்பந்தன் ஐயாவின் தலைமையில் வவுனியாவில் கூடியிருந்த வேளை, அப்பொழுது யாழ் ஊடகவியலாளர் முன்னாள் சிரேஷ்ட போராளிகளை அழைத்து வந்து இந்தத் தேர்தலில் எங்களையும் இணைத்துப் போட்டியிட வேண்டும், போராளிகளுக்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்று கேட்ட போது, ஒரேயடியாக அதற்குரிய தகுந்த காரணம் இப்போது இல்லை, போராளிகளை இப்போது இணைக்க முடியாது என சம்பந்தன் ஐயா சொல்லிவிட்டார். பிறகு அதே ஊடகம் அல்லது அதே ஊடகவியலாளர் எழுத்துக்களெல்லாம் இந்த போராளிகளை யாரோ தவறாக வழிநடத்துகிறார்களாம். அன்று தான் செய்கின்ற போது சரியாகப் பட்டது. இன்று பிழையாகப்படுகிறது. அந்த ஊடகவியலாளரை யரோ பிழையாக வழிநடத்துகிறார்களா? போராளிகள் மத்தியில் ஏன் நலன் பேணும் விடயத்தில் திடீர் அக்கறை எனப் போராளிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் அந்தப் பத்தி ஒரு குழப் பத்தை உண்டு பண்ணியிருக்கிற நிலை மையை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டமைப்புக்குள் இருக்கின்ற உட்கட்சி முரண்பாடுகள் அது மக்களுக்கும் எங்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியை கொண்டு வந்திருக்கின்றது. உங்களையும் பாதித்து செல்வதால் இந்த விடயத்தை சொல்கின்றேன். விடுதலைப் புலிகளால், தலைவர் பிரபாகரனால் இந்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்பதனால் அதனுடைய வீழ்ச்சியோ அல்லது மக்களில் இருந்து அந்நியப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித் திட்டமோ எல்லோரையும் பாதிக்கும். எங்களுக்குள் வேறுபாடு இருக்கின்ற போது அதில் உங்களுக்கும் பங்கு இருக்கின்றது.

**சம்பந்தன் கூறுவது சுத்தப் பொய்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற போது தலைவர் விடுகின்ற தவறுகளை அல்லது ஒரு பங்காளிக் கட்சி விடுகின்ற தவறுகளை எப்படி அதில் இருக்கின்றவர்கள் சுட்டிக்காட்ட முடியுதோ அதே அளவுக்கு போராளிகளாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. அரசியல் ரீதியாக உங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட உங்களின் நலன்களிலும் எதிர்காலத்தில் செயற்படக்கூடிய ஒரு அமைப்பு தவறு செய்யும் பட்சத்தில் அதை தடுக்க அல்லது எதிர்த்து குரல் கொடுக்க கூடிய தகைமை உங்களுக்கும் இருக்கிறது.

அண்மையில் எங்களது கூட்டமைப்பினுடைய தலைவர் சம்பந்தன் ஐயா அவர்கள் 'எங்களுக்குள் எந்தப் பிளவும் இல்லை. ஒற்றுமையாகத் தான் இருக்கின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள் பிளவு இல்லை' என்ற ஒரு கருத்தை கூறியிருந்தார். அது சுத்தப் பொய். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை. கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இல்லை. ஒரே கட்சிக்குள்ளேயே பல்வேறு பிரச்சனைகள் இருகின்றன. அண்மையில் எங்களுடைய தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவராக இருக்கின்றவர் அண்ணன் தவராசா அவர்களே அதனை ஏற்றுக் கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறிய கருத்து உண்மையானது என அவர் ஏற்றுக் கொண்டார். அப்படியெனில் முக்கிய தலைவர்களே உணர்திருக்கிறார்கள். தவறுகள் நடக்கின்றது என்பதை அவர்களே உணர்ந்துள்ளார்கள். சம்பந்தன் ஐயா அதை மறைக்கப் பார்க்கின்றார். அவரால் தற்போது ஒழுங்காக செயற்பட முடியாது. இதனை பொதுவெளியில் சொல்லவும் நான் தயாராக இருகின்றேன். அவரால் செயற்பட முடியாத நிலைமை இருக்கிறது. அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களிலிருந்து அந்நியப்பட்டு கொண்டு இருக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ். பரமேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு!













யாழ்ப்பாணம், நவ. 14

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாட்டில், பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. மகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாதன் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர்.

வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலரை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் மற்றும் சைவ சித்தாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. செல்வமனோகரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடன ஆற்றுகையும், சேர். பொன். இராமநாதன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பீட மாணவிகளின் விசேட நாட்டிய, நடன நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் இடம்பெற்றன.

நிகழ்வில் சமயத் தலைவர்கள், பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய அனுமதிகோரும் வர்த்தக அமைச்சு!

உள்நாட்டில் சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்பட்டாலும் அதனை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி போதுமானதாக இல்லை என்பதால் அதனை இறக்குமதி செய்ய வேண்டும் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது பெலவத்தை, செவனகல, ஹிங்குரான மற்றும் கல்ஓயா தொழிற்சாலைகளில் சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் எண்பதாயிரம் மெற்றிக் தொன் சிவப்பு சீனி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்தார் இலங்கை உயர்ஸ்தானிகர்!



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோர் சனிக்கிழமை புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடினர்.

### வவுனியாவில் காட்டு யானை அச்சுறுத்தல்;

## அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் குடியிருக்க அஞ்சும் பொதுமக்கள்!

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டம் பகுதிக்குள் புகுந்த காட்டு யானை அங்கு வசிக்கும் மக்களை அச்சுறுத்துவதால் அங்கு குடியேற மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

அண்மைய சில தினங்களாக அரச ஊழியர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்த காட்டு யானை பயன் தரும் மரங்களை துவசம் செய்து அங்கு குடியிருக்கும் மக்களை அச்சுறுத்தி வருகின்றது.

இதனால் அப்பகுதியில் குடியேறுவதற்கு மக்கள் அச்சமடைந்து வருகின்றனர். சிலர் தமது குடியிருப்புக்களில் இரவில் தங்குவதற்கு அஞ்சி வேறு இடங்களில் இரவுப் பொழுதைக் கழித்து வருகின்றனர்.

காட்டு யானையின் அச்சுறுத்தல் தொடர்பாகப் பொலிஸார் மற்றும் கிராம அலுவலகருக்கு அறிவித்தும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஓமந்தை அரச ஊழியர் குடியிருப்புக்குள் தற்போது காட்டு யானையின் அச்சுறுத்தல் அதிகளவில் இடம் பெற்று வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அங்கு குடியிருக்கும் மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திலினி பிரியமாலி விவகாரம் குறித்து ஞானசார தேரரிடமும் வாக்கு மூலம்!

திகோ குழுமத்தின் உரிமையாளர் திலினி பிரியமாலியின் பாரிய நிதி மோசடி தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் நாயகம் கலகொட அத்தே ஞானசார தேரரிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் கடந்த சனிக்கிழமை வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

ஞானசார தேரரிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது ஞானசார தேரர் தொடர்பான உரையாடல்கள் பதிவாகியுள்ளமையால், அவர் அழைக்கப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மக்களின் எதிர்பார்ப்பே ஐக்கியம்

எது நடக்க வேண்டும் என்று இப்பத்தியில் நேற்று கூட வற்புறுத்தினோமோ, அது இப்போது நடப்பதில் – கட்டவிழ்வதில் – மிகுந்த மகிழ்ச்சி.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு தங்கள் அபிலாஷை – வேணவா – எதிர்பார்ப்பு – விருப்பம் – எது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் தரப்பைப் பேச்சுக்கு அழைத்து இருக்கின்றார். உத்தியோகபூர்வ அழைப்புக் கிடைக்க முன்னர் தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எங்கள் அபிலாஷை சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தான் என்பதை வலியுறுத்த வேண்டும் என்ற அவாவை இந்த பத்தியில் பல தடவைகள் கோடி காட்டி வந்தோம்.

அதற்கான தளத்தை, சமய சந்தர்ப்பம் பார்த்து, உரிய வேளையில், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

சமாதானத்தைக் கட்டி எழுப்புவது தொடர்பான ஐ.நாவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கை வருகின்றது.

கூட்டமைப்பின் மூன்று பங்காளி கட்சிகளின் தலைவர்களும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன் என அனைவரும் இந்த ஐ.நா. உயர்மட்டக் குழுவைக் கொழும்பில் நாளை காலை சந்திக்கின்றனர். முக்கிய பேச்சு இடம் பெற இருக்கின்றது.

இந்தச் சமயத்தில் நாளை மாலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏனைய தலைவர்களையும் அழைத்துப் பேசும் நகர்வை சம்பந்தன் எடுத்திருக்கின்றமை மிகவும் பொருத்தமானதே.

பெரும்பாலும் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளினதும் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர். தமிழ் மக்களின் ஏகோபித்த அபிலாஷை சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு என்பதை ஒன்று சேர்ந்து வலியுறுத்துவர் என எதிர்பார்க்கலாம்.

ஆனாலும் வழமை போல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மட்டும் வீம்புப் பிடிவாதம் பிடித்துத் தனி வழி போனாலும் போக கூடும்.

ஆனால் அப்படி செய்யக்கூடாது. தாங்கள் மட்டும் தான் 24 கரட் சுத்த சொக்கத்தங்கம், ஏனைய கட்சிகள் எல்லாம் தரம் குறைந்த தங்கங்கள், பித்தளைகள் என்ற கணக்கீட்டில் இருந்து அக்கட்சி வெளியே வர வேண்டும்.

விபரீதமான விளக்கங்கள் – வினோதமான காரணங்கள் – வித்தியாசமான வியாக்கியானங்கள் – மோசமான பிரச்சாரங்கள் – போன்றவற்றை முன்வைத்து, இப்படி ஐக்கியப்பட்டு செயற்படக் கிடைக்கின்ற வாய்ப்பை இன்று கொழும்பில் கூடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உயர்மட்டக் குழு பாழடித்து விடக்கூடாது.

இன்று தமிழ்த் தேசிய கட்சிகள், தங்கள் அரசியல் எதிர்பார்ப்பை அடைவதற்கு ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியமை காலத்தின் கட்டாயம் என்பது மக்களின் கருத்து. அதைப் புரிந்து கொண்டு தமிழ் கட்சிகள் செயற்பட வேண்டும்.

# நாட்டின் தற்போதைய அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்!

## சாகல ரத்நாயக்க பெருமிதம்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இந்த அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக சமூகத்தில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களின் பிள்ளைகளின் போசாக்கு நிலையை பாதுகாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும் எனவும் ஆனால், அதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவை எனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சரியான தொலைநோக்குப் பார்வையின் ஊடாக நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு உறுதியான கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்குத் தேவையான நடவடிக்கையை ஜனதிபதி எடுப்பர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 2023 முதல் தரம் ஒன்றில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கில பாடம்!

## கல்வி அமைச்சர் சுசில் உறுதி



தரம் ஒன்றில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் பழக்கத்தை அதிகரிக்க 2023 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச பாடசாலைகளின் முதலாம் மற்றும் இரண்டாம் தரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 13 ஆயிரத்து 500 ஆசிரியர்களை நவம்பர் 18 மற்றும் 9 ஆம் திகதிகளில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சியளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்காலத் தேவைக்கு ஏற்ற வகையில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஆங்கில மொழிமூலப் பாடப்புத்தகங்களில் உள்ள இலக்கணப் பிழைகள் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அவ்வாறான இலக்கணப் பிழைகள் உள்ளனவா என்பதைக் கண்டறியுமாறு தேசிய கல்வி நிறுவகத்துக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இலங்கையிலுள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் விரும்பினால் சிங்கள மொழிமூலத்தில் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

தற்பொழுது பாடசாலைகளில் போதைப் பொருள் பாவனை அதிகரித்திருப்பதாகவும், இதனைத் தடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்ததுடன், இது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன எனவும் அமைச்சர் பதில் வழங்கினார்.

# ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் நீராடியவர் நீரில் மூழ்கி சாவு!

கொழும்பு, நவ. 14

கல்கிஸை பிரதேச ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற உபசாரத்தில் கலந்து கொண்ட பின்னர் அங்குள்ள நீச்சல் தடாகத்தில் நீராடிய இளைஞர் ஒருவர் மூழ்கி உயிரிந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டு கொழும்பு தெற்கு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சோதனை செய்தபோது அவர் மதுபானம் அருந்தியிருந்தமை தெரிய வந்துள்ளது.

வைத்தியசாலையில் உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அங்கு வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



'சாகுமுன் உன் பாட்டன்
நாட்டிய பழ மரங்களைக்
கேட்டுப்பார்,
உனது பரம்பரையின்
கனவுகளை
இன்னமும் அது வைத்
திருக்கக்கூடும்.'
- கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் -

# பஸிலுக்காக எடுத்த 3 தீர்மானங்களால் முழுநாடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது!

## கம்மன்பில கூறுகிறார்



இரசாயன உரத்தைத் தடைசெய்தால் விவசாய புரட்சி செய்யலாம் என்ற தவறான ஆலோசனையை வழங்கியது யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போதாவது நாட்டு மக்களுக்குக் குறிப்பிட வேண்டும்.

பொதுஜன பெரமுன அரசாங்கம் பஸில் ராஜபக்ஷ விற்காக எடுத்த மூன்று தீர்மானங்கள் முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

விவசாயத்துறைக்கு ஏற்படுத்திய தாக்கம் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற இலங்கை மக்கள் கூட்டணியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், எமக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இரசாயன உரம் இறக்குமதி மற்றும் பாவனையைத் தடைசெய்யும் வகையிலான பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

சேதன பசளை திட்டம் சிறந்தது, ஆயினும் அதனை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும், ஆகவே இரசாயன உரம் இறக்குமதி மற்றும் பாவனை ஒரே தடவையில் தடை செய்யும் தீர்மானத்தை பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.

ஜனாதிபதி எது குறிப்பிட்டாலும் 'ஆம் சேர்,உங்கள் தீர்மானம் அருமை' என அனைத்துக்கும் புகழ்பாடும் தரப்பினர் ஜனாதிபதியிடம் இரசாயன உரத்தைத் தடை செய்தால் நீங்கள் உலக மட்டத்தில் பெருமையாகப் பேசப்படுவீர்கள், விவசாயத்தில் புரட்சி செய்யலாம் எனப் புகழ்பாடினார்கள்.

தவறான புகழ்பாடல்களுக்கு கவனம் செலுத்திய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரசாயன உரத்தைத் தடை செய்தார்.

சேதனை பசளை திட்டம் ஆரம்பம் தோல்வியடைந்த போது, மீண்டும் இரசாயன உரத்தை இறக்குமதி செய்து, சேதனை பசளைத் திட்டத்தை கட்டம் கட்டமாக செயற்படுத்துமாறு கொழும்பு மாவட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் அழுத்தமாக வலியுறுத்திய போது,விவசாய பிரதேச அமைச்சர்கள் சேதன பசளை திட்டத்தை இரத்து செய்தால், ஜனாதிபதியின் ஆத்ம கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படும். ஆகவே இரசாயன உரத்தை மீண்டும் இறக்குமதி செய்யக் கூடாது' என மீண்டும் புகழ்பாடினார்கள்.

இரசாயன உரம் தடை செய்யப்பட்டதால் விவசாயத் துறைக்கு ஏற்பட்ட பாதிப்பு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.

இரசாயன உரத்தைத் தடை செய்தால் விவசாய புரட்சி செய்யலாம் என்ற தவறான ஆலோசனையை வழங்கியது யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போதாவது நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும்.

விவசாயத்துறைக்கு ஏற்பட்ட தாக்கம் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்தது.

அமெரிக்க பிரஜையான பஸில் ராஜபக்ஷ இரட்டை குடியுரிமையுடன் நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் என்பதற்காக ராஜபக்ஷர்கள் அரசியல் ரீதியில் தவறான தீர்மானங்களை எடுத்தார்கள். பஸில் ராஜபக்ஷவிற்காகவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

எவ்விதமான பொருளாதார ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டு வரிச்சலுகை வழங்கப்பட்டது.

தூரநோக்கமற்ற வகையில் வழங்கப்பட்ட வரிச்சலுகையால் அரச வருமானம் பெருமளவில் இழக்கப்பட்டது, அதன் தாக்கத்தை தற்போது எதிர்கொள்கிறோம்.

2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலின் வெற்றியை இலக்காக கொண்டு வரி சலுகை வழங்கப்பட்டது. சாதாரண தர பரீட்சையில் சித்தியடையாத ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கல், 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கல் என்ற மூன்று தவறான தீர்மானங்கள் பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்துக்காக எடுக்கப்பட்டன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே பல பில்லியன் ரூபா அரச வருமானம் இழக்கப்பட்டது.

பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழித்த பொதுஜன பெரமுனவினர் தற்போது மீண்டும் எழுவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை வலம் வருகிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் பொதுஜன பெரமுன படுதோல்வியடையும். – என்றார்.



# 200 வருடங்களாக எமது நாட்டுக்காக உழைக்கும் மலையக மக்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை!

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் வருத்தம்



மலையகத்தை பொறுத்தவரையில் நாங்கள் 200 வருடங்கள் வாழ்ந்தாலும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் தொடர்கின்றது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுப்பதில் பெரும் பங்கு வகித்தாலும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்குமார் தெரிவித்தார்.

அண்மையில் கண்டி ரஜவெல இந்து தேசிய கல்லூரியின் பரிசளிப்பு விழா பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம். கோகிலேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

எமது நாட்டின் ஜனாதிபதி மலையக மக்களின் உயர்வுக்காகவும் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்காக ஒரு குழுவை அமைப்பதற்கும் தீர்மானித்துள்ளார்.

அந்தக் குழுவுக்குள் உள்வாங்கப்பட வேண்டியவர்களை சிபாரிசு செய்யும்படி எம்மிடம் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்.

ஒரு முக்கியமான விடயத்தை நான் அவர்களிடத்தில் முன்வைத்துள்ளேன். இதற்கான குழுக்களை அமைப்பதற்கு அவசியம் கிடையாது.

எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முதலில் இந்நாட்டிலே காணப்படும் பாரபட்சம் என்ற ஒரு விடயத்தை மட்டும் அகற்றுங்கள்.

மலையக மக்களின் பிரச்சினைகள் இயல்பாகவே தீர்ந்துபோகும் என்ற விடயத்தை நான் சுட்டிக்காட்டினேன்.

எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும், நமது நாட்டில் பாரபட்சம் என்ற விடயமும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடனான செயற்பாடும் எமது சமூகத்துக்கு தலைவிதியாக இருந்துகொண்டிருக்கிறது.

இந்த பாரபட்சமும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கூடிய செயற்பாடும் நீக்கப்பட்டால் போதும். நாம் ஏனையவர்களுக்கு நிகரானவர்கள் அல்லது ஒருபடி மேலானவர்கள் என்ற அந்தஸ்தைப் பெற முடியும்.

மலையக மக்கள் ஒவ்வொருவரும் பாரபட்சம் என்ற நிலைக்கு முகங்கொடுத்தவர்களாகவே உள்ளனர்.

ஆகவே, புதிதாகக் குழுக்கள் அமைக்கவோ அல்லது புதிதாக எமது மக்களின் பிரச்சினைகளை என்னவென்று தேடிப் பார்த்து பரிகாரம் காண வேண்டிய அவசியமோ கிடையாது.

பாரபட்சம் என்ற விடயம் நீக்கப்பட்டாலே நாங்கள் எமக்கான இலக்கை நோக்கி மிக விரைவாக பயணிக்க முடியும். அதை அடையவும் முடியும்.

200 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக எம் மத்தியில் இதுவரைக்கும் ஒன்பது பேராசிரியர்களே உருவாகியுள்ளார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயம். நாங்கள் எவரோடும் போட்டி போடக்கூடியவர்கள். வாய்ப்பில்லாத நிலைமை எமது முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கின்றது. எனவே, வாய்ப்புகளைப் பெறுவதற்கு முயற்சி செய்வோம்.

கல்வி இராஜாங்க அமைச்சராக நான் எவ்வளவு காலம் இருப்பேன் என்று தெரியாது.

நாட்டிலே இருக்கும் அரசியல் நிலைமை, அரசியல் களம் அவ்வப்போது மாறிக்கொண்டு வருகிறது.

30 தினங்கள், மூன்று மாதங்கள் அல்லது மூன்று வருடங்கள் இராஜாங்க அமைச்சராக இருப்பேனா என்று தெரியாது. ஆனால், நான் இருக்கும் காலத்தில் இந்தப் பாடசாலைக்கு எவையெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டியவனாக உள்ளேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபையின் அவைத் தலைவர் துரை மதியுகராஜா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர், பிரஜாசக்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், பரீட்சை திணைக்கள உதவி ஆணையாளர் விஸ்வநாதன், உதவி கல்விப் பணிப்பாளர் முத்துக்குமாரன், உதவி கல்விப் பணிப்பாளர் நீதிராசா, தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

*Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=*
*Chiken Fried Rice with Vegetable - 1100/=*
*Kothu Rotty With Vegitable in Indian Style*

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# நுட்பியல் அவத்தை

## ஓ.ரி.ரி. தளம்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




ஒரு காலத்தில் குடும்பமாக சினிமா தியேட்டருக்கு போவது பெரும் கொண்டாட்டமாகவிருந்தது. பின்னர் தொலைக்காட்சி அறிமுகமானதன் பின்னர் குறிப்பாக எண்பதுகளில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னாலிருந்து படம்பார்ப்பது குடும்பத்தின் மகிழ்ச்சியானது. அண்மைய ஆண்டுகள் வரையில் எமது நட்சத்திர நடிகர்கள் சொல்லி வந்தார்கள் திரைப்படங்களை திரையரங்குகளிற்கு சென்று பாருங்கள் அது அந்த அகலத்திரைக்காகக எடுக்கப்பட்டது அதனை சிறிய வீட்டு தொலைக்காட்சித் திரையில் பாரப்பதால் அதன் முழு அனுபவத்தையும் பெறமுடியாது என்று சொன்னார்கள். ஆனால் இப்போ அதே நட்சத்திர நடிகர்கள் தமது படங்களை ஓ.ரி.ரி. என்ற தளத்தில் வெளியிடுகிறார்கள். இந்த மாற்றங்கள் வேகமாக எமது கண்முன்னே நடக்கின்றன. சிறிய திரையில், மிகச்சிறிய திரையில் வேண்டிய நேரத்தில் இப்போது திரைப்படங்களைப்பார்க்கும் கலாச்சாரம் விரைவாக வளர்ந்து வருகிறது.

இப்போ பொழுதுபோக்குத் துறையில் அடுத்தது என்ன? என்பதைப் பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். அதற்கிடையில் ஓ.ரி.ரி. என்ற நுட்பியல் அவத்தை பற்றிப்பார்க்கலாம். இந்த நுட்பியலால் உலகம் இனி தொலைக்காட்சிக்கு முன்னால் இருக்கப் போவதில்லை என்று தெரிகிறது.

இப்போது நாம் அனைவரும் எங்களுக்கு பிடித்ததை, பிடித்த சாதனத்தில் பாரக்கமுடியும். இதில் சிறந்த அம்சம் என்னவென்றால், நாங்கள் விரும்பும் போதெல்லாம் வேண்டிய உள்ளடக்கத்தைப் பார்க்க




முடியும். இது ஒரு வித்தியாசமான அனுபவம். அது நமது தேவை, மனநிலை, உறவுகள், பழக்கவழக்கங்களில் கலாச்சாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றன. ஓ.ரி.ரி. தளம் எதிர்காலத்தில் கலாச்சாரத்தை வடிவமைக்கும் எனலாம்.

### OTT என்றால் என்ன?

Over the Top (OTT) என்பது ஒளிபரப்பு சேவையாகும். (ஸ்ட்ரீமிங்), ஆம். இந்த உள்ளடக்கத்தை கணினிகள், ஸ்மார்ட்போன்கள் மற்றும் பிற சாதனங்களில் ஒளிபரப்புசெய்யலாம். இதற்கு பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். Netflix, Disney+, Hulu, HBO Max, Amazon Prime Video, Hulu, Peacock, Pluto TV போன்றன.

### OTTக்கும் தொலைக்காட்சிக்கும் என்ன வித்தியாசம்?

தொலைக்காட்சிக்கு கேபிள் சேவை அல்லது ஆண்டெனா தேவை அந்த சேவையைப் பெறுவதற்கு சந்தா செலுத்த வேண்டும். ஆனால் ஓ.ரி.ரி அவ்வாறில்லாமல் நுகர்வோர் நேரடியாக பணம்செலுத்தி இணையத்தில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களைப் பார்க்க முடியும். தரவிறக்கம் செய்ய முடியும். நுகர்வோர் ஓ.ரி.ரி. உள்ளடக்கத்தை எங்கும், எந்த நேரத்திலும் பார்க்கலாம்.

### OTT சேவைகள் எவ்வாறு செயல்படுகின்றன?

ஓ.ரி.ரி. சேவையை கணினி, போன், டேப்லெட், ஸ்மார்ட் டிவி அல்லது கேமிங் கன்சோல் உள்ளிட்ட





பல வழிகளில் அணுகலாம். இங்கு கட்டண – ரி.வி சேவை வழங்குனருக்கான சந்தா தேவையில்லை – ஆனால் ஓ.ரி.ரி சேவையைப் பொறுத்து, சந்தா தேவைப்படலாம். Netflix>Disney+ போன்ற சேவைகளுக்கு இது பொருந்தும். இதற்கு, வாடிக்கையாளர்களுக்கு அதிவேக இணைய இணைப்பு, செயலி அல்லது உலாவிகளை ஆதரிக்கும் இணைக்கப்பட்ட சாதனம் மட்டுமே தேவை.

ஓ.ரி.ரி இன் வருகை கேபிள் இணைப்பில் தொலைக்காட்சி சேவையை வழங்குபவர்களுக்கு தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன. அதே வேளை பல தொலைக்காட்சிகள் தமது சேவைகளை ஓ.ரி.ரி தளங்களுக்கு மாற்ற முயற்சிக்கின்றன.

OTT இயங்குதளத்திற்கும்,YouTube சேவையும் வேறுவேறானவை YouTube என்பது ஒரு சமூக வீடியோ தளமாகும், இது இலவச உள்ளடக்கத்திற்கான ஒரு இடமாக உள்ளது. OTT அவ்வாறில்லை அதில் தொழில்முறை தயாரிப்புக்கள் மட்டமே கிடைக்கும். அதனால் அதனை பணம் கொடுத்து பெற வேண்டியிருக்கும். இதற்கு, வாடிக்கையாளர்களுக்கு அதிவேக இணைய இணைப்பு மற்றும் ஆப்ஸ் அல்லது உலாவிகளை ஆதரிக்கும் இணைக்கப்பட்ட சாதனம் தேவை.

உலகளவில் கொவிட் –19 பொது முடக்கம் அறிவிக்கப்பட்டதால் ஏற்பட்ட நிலைமைக்குப் பிறகு, கச்சேரிகள், இசை விழாக்கள், மாநாடுகள் போன்ற பெரியநிகழ்வுகளைநேரலைஸ்ட்ரீமிங்செய்வதற்கான தனித்துவமான வாய்ப்பையும் OTT வழங்கியுள்ளது, அந்த வாய்ப்பு இல்லையெனில் அந்த நிகழ்ச்சிகள் ரத்துசெய்யப்பட்டிருக்கும். இந்தத் தளத்தின் மூலம், படைப்பாளிகள், நிகழ்வு அமைப்பாளர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் உள்ளடக்கத்தை அதிக பார்வையாளர்களுக்கு பணமாக்குவதற்கான வழங்க முடியும்.

கமல்ஹாசனின் சமீபத்திய படமான விக்ரம், சமீபத்திய வரலாற்று திரைப்படம் பொன்னியின் செல்வன் உட்பட, கடந்த ஆண்டில் தமிழ் திரைப்படங்கள் அமேசான் பிரைம் வீடியோ, ஜீ 5, டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் மற்றும் நெட்பிக்ஸ் போன்றவற்றில் வெளிவந்துள்ளன. அதே போல பல நல்ல தமிழ்திரைப்படங்கள் இன்று ஓ.ரி.ரி. தளத்தில் கிடைக்கின்றன. எதிர்காலத்தில் இந்தத் தருணத்திற்காகவே திரைப்படங்கள் தயாராகின்றன.



# பேணியுடல் காக்கும் பெருவழியில் நடப்போம்!

நீரிழிவு தினம் இன்றாகும்



மூவிரண்டு சுவையதனுள் முன்னிற்கும் சுவைதான்
நாவிரும்பும் இனிப்பான நற்சுவையே ஆகும்
போயிருந்து விருந்துண்ணும் பொழுதெல்லாம் அங்கே
வாவென்று வரவேற்கும் நற்சுவையும் இனிப்பே

இனிப்பில்லாக் கொண்டாட்டம் எங்குமே இருக்கா
இல்லத்து விழாவனைத்தும் இணைத்துவிடும் இனிப்பு
இல்லறத்தில் இணைவாரை வாழ்த்துகின்ற போதும்
இனிமையுடன் வாழ்கவென எடுத்து மொழிகின்றோம்

திருமணத்தில் இனிப்பு திருவிழாவில் இனிப்பு
தித்திப்பு வாழ்வினிலே முத்திரையாய் இருக்கு
ஆலயத்தில் இனிப்பு அரங்குகளில் இனிப்பு
அனைத்துக்கும் முன்னிற்கும் அரனுக்கும் இனிப்பே

பிறப்புமுதல் இறப்புவரை இனிப்புமது தொடரும்
கசப்புநிறை வாழ்வுதனை விரும்பிடுதல் உண்டோ
நினைப்பெல்லாம் இனிப்பாக நிறைந்துமே இருக்கு
இனிப்பதனை ஒதுக்கிவிட நினைத்திடுவார் உண்டோ

உடல்வளர உடல்சிறக்க உண்ணுகின்றோம் உணவை
உண்ணுகின்ற உணவினுக்கும் ஒழுங்குமுறை தேவை
அளவறிந்து உண்ணுகின்ற அணுகுமுறை தவறின்
அல்லலொடு தொல்லைவரும் எனவுணர்தல் வேண்டும்

உலகத்தைப் பலநோய்கள் பற்றியே இருக்கு
அதையகற்ற பலமருந்தும் வந்தபடி இருக்கு
நிலவுலகில் நீரிழிவு நீண்டபடி இருக்கு
அதையுணராப் பலபேர்கள் அல்லலுறுகின்றார்

இனிப்பதனை விட்டுவிட எவர்க்கும் மனமில்லை
இனிப்பதனைக் கண்டுவிட்டால் இருந்திடுவார் பக்கம்
எடுத்துவிடும் இனிப்பதனால் என்னவருமென்று
எண்ணாது இருப்பவரே ஏற்றிடுவார் சுமையை

சாதிமதம் பாராது சமத்துவமாய் இருக்கு
இனங்கடந்து மொழிகடந்து எல்லை கடந்திருக்கு
உலகத்தில் நீரிழிவு பேரலையாய் எழுந்து
யாவரையும் மூழ்கடிக்கத் துடிக்கிறது நாளும்

ஊசிமுதல் மாத்திரைகள் எடுக்கிறார் பலரும்
உடற்பயிற்சி செய்யாமல் உண்ணுகிறார் இனிப்பை
வீதியெலாம் விற்கின்ற விதம்விதமாம் உணவை
வாங்கியுண்டு நோய்பெருக்கி வதங்கிறார் நாளும்

நீரிழிவு வியாதியல்ல எனவுரைக்கும் வார்த்தை
நெஞ்சுக்கு நிம்மதியைக் கொடுக்கின்ற வார்த்தை
ஆனாலும் கட்டுக்குள் வைக்காமல் விட்டால்
ஆபத்தை அதுவாங்கிக் கொடுத்துவிடும் எமக்கு

நிரிழிவு வந்தால் நெருங்கிவரும் பலநோய்
பார்வை பழுதாகும் பக்கவாதம் கிட்டவரும்
நரம்பு தடுமாறும் நம்மிதயம் நோவெடுக்கும்
நம்மையறியாமல் நலனனைத்தும் போக்கிவிடும்

நீரிழிவு நம்மை நெருங்கிவிட வைக்காமல்
நிதமுமே நலன்வேலி நாமதைத்தல் அவசியமே
வந்துவிட்ட பின்னாலே வதங்கிவிடல் முறையல்ல
வாராமல் காப்பதற்கு வழிவகுத்தல் அவசியமே

உடற்பயிற்சி செய்து உணவை ஒழுங்காக்கி
நடைப்பயிற்சி நாளும் சென்றிடுதல் நன்றே
இனிப்பதனை நினைப்பில் இருத்திடுதல் நன்றே
இனிப்பதனை உணவாய் இருத்திடுதல் தவிர்ப்போம்

மாச்சத்தைக் குறைப்போம் மாங்கனியை விடுவோம்
பேரீச்சை பலாக்கனியை பெயர்மட்டும் உரைப்போம்
வெந்தயத்தை கீரையினை விரும்பியே உண்போம்
வில்லங்கம் தருமுணவை விலத்தியே வைப்போம்

பசித்தவுடன் உண்போம் பாயாசம் தவிர்ப்போம்
பழுப்பாகு பழரசங்கள் பால்கோவா விடுப்போம்
தானியங்கள் எடுப்போம் தவிட்டரிசி உண்போம்
பேணியுடல் காக்கும் பெருவழியில் நடப்போம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# வடக்குடன் கிழக்கு எம்.பிக்களையும் ஜனாதிபதி சந்தித்தாக வேண்டுமாம்!

## வலியுறுத்துகிறது ரெலோ



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு எம்.பிக்களுடன் அடுத்தவாரம் பேச்சுகளை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளர்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக விடுக்கப்பட்ட அழைப்பு நடைமுறையில் சாத்தியப்பட வேண்டும் என்று ரெலோ தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலாநன் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இனப்பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகள் சம்பந்தமான பேச்சுகள் முன்னெடுக்கின்றபோது கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிக்க முடியாது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு உறுப்பினர்களுடன் சந்திக்கும் அதேநேரம் கிழக்கு உறுப்பினர்களின் பிரசன்னம் அவசியமாகின்றது. வடக்கை தனியாகவும் கிழக்கைத் தனியாகவும் பார்க்கமுடியாது.

அதேநேரம், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தால் அது இணைந்த வடக்கு கிழக்கிலேயே அமைய வேண்டும் என்பது எமது நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது.

அவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு உறுப்பினர்களுடனான பேச்சுகளின் போது கிழக்கு உறுப்பினர்களையும் உள்ளீர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

இதனால் ஜனாதிபதியைச் சந்தித்து நேரில் கோரிக்கை விடுப்பதென தீர்மானித்துள்ளோம். பெரும்பாலும் இந்தச் சந்திப்பு அடுத்தவார நாடாளுமன்ற அமர்வில் இடைப்பட்ட நேரத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். – என்றார்.

# அல்குவைதாவுடன் தொடர்பு வைத்திருந்த வர்த்தகரை இலங்கை புலனாய்வு பிரிவு நீண்டகால கண்காணிப்பில்!

அல்குவைதாவிற்கு நிதி வழங்கியதாக அமெரிக்க அதிகாரிகளால் குற்றம்சாட்டப்பட்டுள்ள இலங்கை வர்த்தகர், இலங்கை புலனாய்வு பிரிவினரால் நீண்டகாலம் கண்காணிக்கப்பட்டார். ஆனால் அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேருவளையை சேர்ந்த வர்த்தகர் முகமட் இர்சாத் முகமட் ஹரீஸ் நிசார், அல்குவைதாவை சேர்ந்த நபருக்கு உதவினார் என அமெரிக்க திறைசேரியின் வெளிநாட்டு சொத்து கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளதுடன் அவருக்கு எதிராகத் தடைகளை விதித்துள்ளது.

வெளிநாட்டு சொத்துக்கட்டுப்பாட்டு அலுவலகத்தின் பட்டியலில் உள்ள அஹமட் லுக்மான் தலிப் என்ற தனது வர்த்தக சகா மற்றும் உறவினருக்கு உதவினார், தலிப் அல்குவைதாவின் வெளிநாட்டு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதிலும் நிதி சார்ந்த விடயங்களிலும் ஈடுபட்டிருந்தார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை வர்த்தகரைக் கண்காணித்த இலங்கையின் புலனாய்வு பிரிவினர் அவர் தொடர்பான விபரங்களை நீண்ட காலத்திற்கு முன்னரே பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் நிசாரின் உள்நாட்டு வர்த்தக சகாக்கள் அவரது நடவடிக்கைகளில் தொடர்புபட்டவர்கள் பற்றி கவனம் செலுத்தி வருகின்றனர்.

நிசார் வெளிநாட்டுவேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்திவந்தார். ஆள்கடத்தல் சட்டவிரோத பணப்பரிமாற்றம் போன்றவற்றில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன.

வடக்கு – கிழக்கில் வீதிகட்டுமான மற்றும் கட்டுமானத்தில் நிசார் ஈடுபட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலனாய்வு தகவல்கள் அவர் மடகாஸ்கர் வர்த்தகருடன் இணைந்து இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கின்றன.

அவர் தற்போது இலங்கையில் வசிக்கவில்லை டுபாயில் வாழ்கின்றார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

# யோசித ராஜபக்ஷ விசாரணையில்!



யோசித ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை செய்யும் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் பிரதமரின் பிரதானியாக விளங்கிய யோசித ராஜபக்ஷ, வெளிநாட்டு பயிற்சிக்காக எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பது தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை கடற்படையில் பணியாற்றியவேளை அவர் எவ்வாறு வெளிநாட்டு பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டார் என்பது பற்றியே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

வெளிநாட்டு பயிற்சிக்கு கடற்படையினரைத் தெரிவு செய்பவர்களை இலஞ்ச ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை செய்யும் ஆணைக்குழு விசாரணை செய்யவுள்ளது.

எனினும் இந்த விசாரணைகள் தொடர்பாக அதிகாரிகள் கனத்த மௌனம் காக்கின்றனர்.

யோசித ராஜபக்ஷ பிரிட்டிஷ் கடற்படையின் டார்ட்மவுத்தில் பயிற்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழில் இன்று விழிப்புணர்வுப் பேரணி!

## யாழ். போதனா பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழ் மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட உள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது நீரிழிவு நோய் தொடர்பில் விழிப்புணர்வுகள் செயற்படுத்தப்படுகின்றன. அதனுடைய ஓர் அங்கமாக சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு இன்று (திங்கள்கிழமை) காலை 7 மணிக்கு வைத்தியசாலையில் இருந்து யாழ். மாவட்ட செயலகம் வரை ஒரு விழிப்புணர்வு பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## வலிந்து காணாமலக்கப்பட்டோர்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 180



நாட்டின் 75 ஆவது வருட சுதந்திர தினத்துக்கு முன்னாகத் தரப்படக்கூடியதாக அரசுத் தரப்பில் தரப்படக் கூடியதாக பிரஸ்தாபிக்கப்படும் தீர்வுகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ள உறவுகளுக்கான பதிலும் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகின்றமை போல, அவர்கள் இறந்தவர்களாகக் கருதப்பட வேண்டும், கிடைக்க மாட்டார்கள், ஆகவே நிதி தொகையை இரண்டு லட்சம் ரூபவுக்கு உயர்த்தி உள்ளோம் என்கிறார் அவர்.

விடுவிக்கப்பட்ட கைதிகளுக்குப் புலம்பெயர் நிதிகள் மாதிரி, இதற்கும் தொகைகள் பேரப் பேசப்படுமா?

வலிந்து காணாமலக்கப்பட்டோருக்



கான அந்தப் போராட்டங்கள் நீர்த்துப் போக பாதைகள் வகுக்கப்படுமா?

அப்படியானால் இந்த உறவுகள் கோரிய நீதி விசாரணைகள்,பொறுப்புக் கூறல் எல்லாம் என்னவாகும்?

நல்லாட்சி காலத்தில் சர்வதேச அழுத்தங்களால் அமைக்கப்பட்ட காணாமல் போனவர்களின் அலுவலக நடவடிக்கைகளுக்கு அப்போது பொறுப்பாக இருந்த அமைச்சர் நாடாளுமன்ற அங்கத்தினர் மனோ கணேசன்.

இப்போது அந்தக் காணாமல் போனவர்களின் அலுவலகப் பணியகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலண்டா.

'காணாமல் போனவர்களில் யாரும் உயிரோடு இல்லை; தரப்பட்ட இரண்டாயிரம் வரையான விண்ணப்பங்களின் விசாரணைகள் முடிந்து விட்டன' என அறிவித்த போது, 'அது பொறுப்பற்றது; அப்படியாக விசாரணைகள் எல்லாம் முடிந்து விட்டால் அவர் ஏன் இன்னமும் பதவியில் இருக்கிறார்?' என மனோ கணேசன் எம்.பி. வினவினார்.

உறவுகளை தாங்களே நேரடியாக இராணுவத்திடம் கையளித்தவர்கள், அவர்களுக்கு என்ன நடத்தப்பட்டது என அங்கலாய்த்து, அறியப்படுபவைகளில் இருந்து ஆறுதல் அடையத் துடிக்கிறார்கள்.

ஆனால், இராணுவமோ தங்களிடம் விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை, அவர்கள் ஸ்ரீலங்காவின் நிவாரண சேவைப் பகுதிகளின் அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட்டார்கள் எனத் தாம் தப்பிக்கும் வழிகளைத் தேடுகிறார்கள்.






உறவுகள் விடுதலைப. புலிகளை இராணுவத்திடம் கையளிக்கவில்லை என ஒரு விவாதத்திற்காகக் கருதினாலும் – வைத்துக் கொண்டாலும் – ஸ்ரீலங்கா அரசின் அதிகாரிகள் கேட்படி தங்கள் பிள்ளைகளை விடுதலைப் புலிகளின் அங்கத்தினரா என அறிந்து கொள்ள (வயது ரீதியாக) தான் கையளித்தார்கள். எவ்வாறு ஆனாலும் கையேற்றவர்களைப் பற்றி கணக்குக் கொடுக்க – விளக்கங்கள் தெரிவிக்க – சர்வதேச சட்டக் கடமைகள், கடப்பாடுகள் அரசுக்கு உண்டு.

விசாரணைகளின் மூலம், நடந்தவற்றின் விளக்கங்கள் பெறப்பட்டு, நீதி நியாயங்கள் நிலை நிறுத்தப்பட்டு அவர்களின் மனங்கள் ஆறுதல் பெற வேண்டும் என்பதே சட்டங்களின் கோட்பாடு கூட. அதில் அடங்கியுள்ள உணர்ச்சிக் கோட்பாடுகளை சட்டமும் மதிக்கிறது.

உள்நாட்டு விசாரணைகளின் கோலங்களையும், நாட்டின் நீதிச் சேவையையும் அறிந்த சர்வதே மனித உரிமை மன்றும் கூட இந்தப் பதின்மூன்று வருடங்களில் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணைகளையே வலியுறுத்தியது.

ஜனாதிபதி ரணிலோ பணத்தினால் இந்த உறவுகளைத் தாஜா பண்ணி விடலாம் எனக் கணித்தாரே ஒழிய, "இவையெல்லாம் எங்களுடைய எழுந்த பிரச்சினைகள் வெளித் தரப்பினரின் தலையீடு இன்றி இவற்றை நாமே தீர்க்க வேண்டும்" என்கிறார்

தமிழ் மக்களது தரப்புகள் ஒத்த குரலில், இவர்களைப் பற்றிய விசாரணைகள், குறைந்த அளவிலாவது வெளித்தரப்புகளை இணைத்து, குறிப்பிட்ட காலத்தில் நடத்தி, அந்த அட்டூழியங்களை நடத்தியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற இணக்கத்தின் உறுதிமொழிகளைப் பெறுவார்களா? அதிலும் பிரிந்து நின்று, விட்டுக் கொடுத்துத் தானே இணக்கம் பெற முடியும் என சந்தர்ப்ப சஞ்சல அரசியல் பேசினால், அதற்குப் பின்னணிகள் இருக்கும். அவற்றை பின்னால் பார்ப்போம்

(வளரும்......)



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜி20 நாடுகள் தலைமையை பொறுப்பேற்கிறது இந்தியா!

* உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவிகிதம்
* உலகளாவிய வர்த்தகத்தில் 75 சதவிகிதம்
* உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு



ஜி20 நாடுகள் அமைப்புக்கான இந்தியாவின் தலைமைப் பதவி என்பது பெண்களுக்கு அதிகாரமளித்தல், ஜனநாயகம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் தனது நிபுணத்துவத்தை உலகத்துடன் அது பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமையும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் தெரிவித்தார். வரவிருக்கும் அந்தப் பதவிக்காலத்திற்கான இலச்சினை, மகுட வாக்கியம் ஆகியவற்றை வெளியிட்டு, இணையதளத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

செல்வாக்கு மிக்க இந்தக் குழுவின் தலைவராக, 'முதல் உலகமோ, மூன்றாம் உலகமோ' இருக்கக் கூடாது, அது 'ஒரே உலகமாக' இருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் முயற்சியாக இருக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

தற்போதைய தலைமையான இந்தோனேசியாவிடமிருந்து இருந்து சக்தி வாய்ந்த இந்தக் குழுவின் தலைமைப் பொறுப்பை இந்தியா டிசெம்பர் 1 அன்று ஏற்கும். 'ஜி20' அல்லது 'குழு 20' என்பது உலகின் முக்கிய வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரங்களின் அரசுகளுக்கிடையேயான மன்றமாகும்.

ஒரு பெரிய வாய்ப்பு வந்துள்ளது. இது ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமைக்குரிய விடயம், இது அவனது பெருமையை அதிகரிக்கும் வியம் என்று ஒன்லைன் நிகழ்வில் மோடி தனது உரையில் கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தைப் பற்றியும் ஆராய்ந்த பிரதமர், சுதந்திரத்திற்குப் பிறகு அனைத்து அரசாங்கங்களும் மக்களும் இந்தியாவை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தங்கள் சொந்த வழிகளில் பங்களித்தனர் எனக் கூறினார்.

"சுதந்திரத்திற்குப் பிறகு, உச்சத்தை இலக்காகக் கொண்டு, பூச்சியத்தில் இருந்து ஒரு குறிப்பிடத்தக்க பயணத்தைத் தொடங்கினோம். கடந்த 75 ஆண்டுகளில் அனைத்து அரசுகளின் முயற்சிகளும் இதில் அடங்கும். அனைத்து அரசாங்கங்களும் குடிமக்களும் தங்கள் சொந்த வழியில் இந்தியாவை ஒன்றாக முன்னோக்கி கொண்டு செல்ல முயற்சித்துள்ளனர் என்று அவர் கூறினார்.




இந்த உணர்வோடு நாம் இன்று முழு உலகையும் அழைத்துச் செல்லும் புதிய ஆற்றலுடன் முன்னேற வேண்டும். இந்தியாவின் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான கலாச்சாரம் இன்னும் ஒன்றை நமக்குக் கற்றுத் தந்துள்ளது, அது, நமது முன்னேற்றத்திற்காக நாம் பாடுபடும் போது, உலகளாவிய முன்னேற்றத்தையும் நாங்கள் கற்பனை செய்கிறோம் என்பதுதான் என்று அவர் கூறினார். .

இந்தியாவின்ஜனநாயகவிழுமியங்களை எடுத்துரைக்கும் மோடி, ஜனநாயகம் ஒரு கலாச்சாரமாக மாறும்போது மோதலின் நோக்கம் முடிவுக்கு வரும் என்பதை உலகுக்குக் காட்ட முடியும் என்றார்.

இந்தியாவில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாடு வெறும் ராஜதந்திர சந்திப்பாக மட்டும் இருக்காது என்றும், அதை ஒரு 'புதிய பொறுப்பாக' நாடு பார்க்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்தியா இதை உலக நாடுகளின் நம்பிக்கையாகப் பார்க்கிறது. இன்று உலகில் இந்தியாவை அறிய, இந்தியாவைப் புரிந்துகொள்ள, முன்னெப்போதும் இல்லாத ஆர்வம் உள்ளது. இன்று இந்தியா புதிய கோணத்தில் பார்க்கப்படுகிறது, என்றார்.

பல துறைகளில் இந்தியாவின் சாதனைகள் உலகின் பிற நாடுகளுக்கு பயனுள்ளவையாக இருக்கும் என்று பிரதமர் கூறினார்.

எடுத்துக்காட்டாக, இந்தியா டிஜிற்றல் தொழில்நுட்பங்களை வளர்ச்சி, உள்ளடக்கம், ஊழலை ஒழித்தல் மற்றும் எளிதாக வணிகம் செய்வதை அதிகரிப்பதற்குப் பயன்படுத்திய விதம் போன்றவை வளரும் நாடுகளுக்கு உதவியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

அதேபோல், இன்று இந்தியா பெண்கள் அதிகாரமளிப்பதில் முன்னேறி வருகிறது என்று அவர் கூறினார். மேலும் எங்கள் 'ஜன்தன் யோஜனா' மற்றும் 'முத்ரா திட்டம்' போன்ற திட்டங்களை அவர்மேற்கோள் காட்டினார். அவை பெண்களின் நிதி சேர்க்கையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இதுபோன்ற பல்வேறு துறைகளில் எங்களின் அனுபவம் உலகிற்கு பெரும் உதவியாக இருக்கும். மேலும் ஜி20 இல் இந்தியாவின் தலைமைப் பதவி, இந்த வெற்றிகரமான பிரச்சாரங்களை உலகிற்கு எடுத்துச் செல்ல ஒரு முக்கியமான ஊடகமாக வருகிறது, என்று அவர் கூறினார்.

'முன்னேற்றமும் இயற்கையும்'ஒன்றுடன் ஒன்று சேர்ந்து செல்ல முடியும் என்பதை இந்தியா உலகிற்கு உறுதியளிக்க முடியும் என்று மோடி கூறினார்.

நாம் நிலையான வளர்ச்சியை தனிமனித வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும். அதற்குப் பதிலாக அரசாங்கங்கள், அதை விரிவுபடுத்த வேண்டும். சுற்றுச்சூழல் உலகளாவிய காரணமாகவும் தனிப்பட்ட பொறுப்பாகவும் மாற வேண்டும் என்று மோடி கூறினார்.




130 கோடி இந்தியர்களின் வலிமை மற்றும் ஆற்றலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜி20 அமைப்பின் இந்தியாவின் தலைமைப் பதவி இருக்கும் என்று பிரதமர் கூறினார்.

ஜி20 தலைமைத்துவத்திற்கான இலச்சினை வெறும் சின்னம் அல்ல என்றார் அவர்.

இது ஒரு செய்தி. இது ஓர் உணர்வு, இது நம் நரம்புகளில் உள்ளது. இந்த இலச்சினையில் தாமரை மலர், இந்தியாவின் புராண பாரம்பரியம், நமது நம்பிக்கை, நமது அறிவு, இவை அனைத்தையும் ஒன்றாக சித்திரிக்கிறது என்று மோடி கூறினார்.

ஜி20 இலச்சினை இந்தியாவின் தேசியக் கொடியின் துடிப்பான நிறங்களில் இருந்து உத்வேகம் பெறுகிறது – காவி, வெள்ளை,பச்சை மற்றும் நீலம்.

இது சவால்களுக்கு மத்தியில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் இந்தியாவின் தேசிய மலரான தாமரையுடன் பூமியை இணைக்கிறது. ஓர் அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, பூமியானது வாழ்க்கைக்கான இந்தியாவின் கிரக சார்பு அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. இது இயற்கையுடன் சரியான இணக்கத்துடன் உள்ளது.

இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்துக்கான கருப்பொருள் – 'வசுதைவ குடும்பம்' அல்லது 'ஒரு பூமி, ஒரு குடும்பம், ஓர் எதிர்காலம்' – என்பது மகா உப நிடத்தின் பண்டைய சமஸ்கிருத உரையிலிருந்து எடுக்கப்பட்டது.

அடிப்படையில், கருப்பொருள் அனைத்து உயிர்களின் மதிப்பையும் – மனிதன், விலங்கு, தாவரம் மற்றும் நுண்ணுயிரிகளையும் – பூமி மற்றும் பரந்த பிரபஞ்சத்தில் அவற்றின் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

வாழ்க்கையின் கரு (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை), அதனுடன் தொடர்புடைய, சுற்றுச்சூழலுக்கு நிலையான மற்றும் பொறுப்பான தேர்வுகள், தனிப்பட்ட வாழ்க்கை முறைகள் மற்றும் தேசிய வளர்ச்சி ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்துகிறது.

ஆர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், கொரியா குடியரசு, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியன ஜி20 அமைப்பில் உள்ளன.

ஜி20 உச்சிமாநாடு பாலியில் நாளையும் மறுதினமும் (நவம்பர் 15 மற்றும் 16 ஆகிய திகதிகளில்) நடைபெறுகிறது. அதில் கலந்து கொள்ளும் முக்கிய தலைவர்களில் மோடியும் ஒருவர்.

ஜி20 என்பது உலக மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 85 சதவிகிதம், உலக ளாவிய வர்த்தகத்தில் 75 சதவிகிதம் மற்றும் உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு ஆகியவற்றைக் குறிக்கும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான முதன்மைமன்றாகும்.

இந்தியா தற்போது இந்தோனேசியா, இத்தாலிமற்றும் இந்தியாவை உள்ளடக்கிய 'ஜி20 முத் தரப்பு' இல் (தற்போதைய, முந்தைய மற்றும் உள்வரும் ஜி20 தலைவர்கள்) பகுதியாக உள்ளது.

**(மூலம்: பி.ரி.ஐ.)**

காலைக்கதிர் Kalaikkathir

## கூட்டமைப்பு ஒரு ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கு சிறந்த ஒரு தலைவர் இல்லாத நிலமை இருந்து கொண்டு இருக்கிறது. இதனால் ஒட்டுமொத்த தமிழினமும் பாதிக்கப்பட போகிறது. ஒட்டுமொத்த தமிழர் என்கின்ற போது அதற்குள் விடுதலைப் புலிகள், போராளிகள் அடங்காது எப்படி இருக்க முடியும்?

**தலைவர் பிரபாகரன் செல்வத்திடம் கூறியவை**

நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படுகின்ற ஆரம்ப காலங்களில், தலைவருடன் சந்திப்பை ஏற்படுத்துகின்ற போது, நாங்கள் ஒன்றாக பேசிய போது, நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனைப் பார்த்து தலைவர் கூறினார் 'செல்வம் நாங்கள் எல்லாவற்றையும் மறந்து விடுவம். கடந்த காலங்களில் நாங்கள் எல்லோரும் பிழை விட்டிருந்தால் எல்லாவற்றையும் மறந்து எங்களுடைய மக்களுக்காக இந்த கூட்டை உருவாக்கி அரசியல் ரீதியாக வெற்றி பெற வேண்டும். நாங்கள் ஒன்றாக இந்த மக்களுக்காக உழைக்க வேண்டும்' என்ற கருத்தை கூறியிருந்தார். அதற்கு பின் நாங்கள் எவ்வளவோ விட்டுக் கொடுப்பு செய்து, பிரிந்திருந்த போராட்ட இயக்கங்கள், மிதிவாதக் கட்சிகள் இணைந்து இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினோம்.

**கழுதை தேய்ந்து கட்டெறுப்பான கூட்டமைப்பு**

ஆனால், இன்று கழுதை தேய்ந்து கட்டெறுப்பான கதையாக கூட்டமைப்பு உள்ளது. முதலில் கூட்டமைப்பில் உள்ள பழைய தலைவர்கள் எல்லாம் தங்களது பதவிகளை ராஜினாமாச் செய்து விட்டு போராளிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். போராளிகள் என்று நான் சொல்வது இளைஞர்களை. ஒவ்வொரு கட்சியிலும், இரண்டாம், மூன்றாம் கட்டத் தலைவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பழைய தலைவர்கள் எல்லோரும் தோற்றுப் போன தலைவர்களாகத் தான் இருக்கிறார்கள். தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன் ஆகியோராக கூட இருக்கலாம். தோற்றுப்போன தலைவர்களாக இருக்கிறார்கள். ஏனைய கட்சிகளின் முக்கிய தலைவர்கள் கூட கூட தாங்கள் தொடர்ந்தும் கட்சியினுடைய தலைவர்களாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறார்கள். அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்க கூடாது. வேணும் என்றால் மக்கள் பிரதிநிதிகளாக இருந்துவிட்டுப் போகலாம். மக்களால் தேர்தெடுக்கப்பட்ட ஜனநாயக உரிமை ஊடாக அவர்கள் வரலாம். ஆனால் தற்போது இருக்கின்ற அரசியல் கட்சிகள், அரசியல் இயக்கங்களினுடைய தலைவர்கள் எல்லோருமே தோற்றுப் போன தலைவர்கள்தான். மக்களுக்கான விடுதலையை வென்று கொடுக்க முடியாத தலைவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் தொடர்ந்தும் தலைமைப் பதவியில் இருப்பதற்கு தகுதி இல்லாத தலைவர்களாக தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

இது உங்களுடைய விடயம். நீங்கள் போராளிகள். எந்தவித அரசியல் தலையீடுகளுமின்றி, நலன்புரி சங்கம் என்ற பெயரில் போராளிகளின் எதிர்காலம், அவர்களுடைய தேவைகள் தொடர்பாக செயற்படவுள்ளீர்கள். அவர்களுடைய தேவைகள் உண்மையாக உணரப்பட வேண்டும். அவர்களுடைய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இனத்தின் ஒரு விடுதலைக்காக ஆயுதம் தூக்கிப் போராடியஒரே குற்றத்திற்காக இந்த போராளிகள் வெறுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு போராளியும் மன ரீதியாக உடைந்து போய் இருக்கிறார்கள். அவர்களது மனங்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. சிலருடைய நடவடிக்கைகளே இதற்கு காரணம். சமூகத்தில் சில இடங்களில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். உரிய மரியாதை வழங்கப்படுகிறது. சில இடங்களில் சாதாரண ஒரு பேராளியாக கூட மதிக்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மாற்றுத் திறனாளிகளான போராளிகள் கூட நாங்கள் இந்த இனத்திற்காகவா போராடினோம் என்றொரு ஏக்கம், ஏமாற்றம் அவர்களுக்கு இருக்கிறது. அதனை நாம் உணர்கின்றோம். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

**தலைவர்கள் ஒரு போதும் ஒற்றுமைப்படப் போவதில்லை**

தலைவர்கள் ஒரு போதும் ஒற்றுமைப் படப்போவதில்லை. எனது அனுபவத்தில், அரசியல் தீர்வுக்காய், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக, ஏதோ அரசியல் நடந்து கொண்டுதான் இருக்குமே தவிர, உரிமைக்காக தமிழ தலைவர்கள் எனத் தமிழ் தேசியத்தின் பேரில் சொல்லிக் கொண்டு, அரசியல் நடத்தும் எந்த தலைவரும் உண்மையான அக்கறையாக செயற்படாதுதான் உள்ளார்கள். நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி தமிழ் மக்களின் உரிமைக்காக கடைசிவரை இணையப்போவதில்லை.

விக்கினேஸ்வரன்ஜயாஅண்மையில் பிரிந்து செயற்படுவது தொடர்பில் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் எனக் கூறினார். முழுக்க முழுக்க அவர்தான் காரணம். அவர் உடைப்பதற்காக, சிதைப்பதற்காக, அவருடைய நிகழ்சி நிரலைக் கொண்டு சென்று விட்டு, இன்று கூட்டமைப்பில் இருந்து பிரிந்திருப்பதை உணர்ந்திருக்கின்றேன் என்கிறார். தமிழ மக்களின் கூட்டுக்குள் அவர் மிகப் பெரிய ஒரு குற்றவாளி. அதேபோல் தான் ஏனையவர்களும்.

கூட்டமைப்பு என்பது பலமான ஒரு சக்தி. அதில் தவறுகள் இருகின்றன. அண்மையில் கூட்டமைப்பை பற்றி எனது முகநூலில் விமர்சனம் செய்தேன். கூட்டமைப்பு ஒரு விபச்சார இல்லமாக செயற்படுவதாக நான் குறை கூறினேன். அங்கத்துவ கட்சி ஒன்றின் செயலாளர் என்னுடைய கட்சியின் தலைவருக்கும், செயலாளருக்கும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார். முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் கட்சியின் சின்னத்தை விபச்சார வீடாக விமர்சிப்பதாக தெரிவித்து கடிதம் வந்தது. நான் விமர்சிப்பேன். தொடர்ந்தும்விமர்சிப்பேன். உள்ளுக்குள் இருந்தாலும், சரி வெளியில் இருந்தாலும் சரி, தொடர்ந்தும் விமர்சிப்பேன். ஏனென்றால் இந்த கட்சியைப் போராளிகள், ஏனையவர்கள் இணைந்து உறுதியான நிலைப்பாட்டோடு வளர்தெடுத்தடுத்தவர்கள், அதற்காக பாடுபட்டவர்கள் நாங்கள். இவர்கள் தங்களது சொந்தக் கட்சியை வளர்த்தால் கூட அது கூட்டமைப்பின் பிரச்சினைதான். தமிழரசுக் கட்சிக்குள் ஆயிரம் பிரச்சுனை இருக்கலாம். அதனை நாங்கள் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு விமர்சிப்போம். தமிழரசுக் கட்சிக்குள் பிளவு என்றாலும் கூட்டமைப்புக்குப் பாதிப்புத்தான். ரொலோவுக்குள் பிளவு என்றாலும், புளொட்டுக்குள் பிளவு என்றாலும் கூட்டமைப்புக்குப் பாதிப்புத்தான். அதனையே பொது வெளியில் கூறுகின்றோம்.

**தமிழரசுக்குள் விமர்சிக்கலாம் நாங்கள் விமர்சித்தால் பிழை**

அதற்கு பிறகு தமிழரசுக் கட்சிக்குள் இருந்தே அந்தக் கட்சியை விமர்சிக்கிறார்கள். அதுவும் தவறுதானே. நாங்கள் விமர்சித்தால் பிழை. ஒரே கட்சிக்குள் விமர்சித்தால் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தச் செயலாளர் இப்ப பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார். விளக்கம் கேட்டாரா? தவராசா தவறு விடுகின்றார் என்று விளக்கம் கேட்டாரா? சிறிதரன் தவறு விடுகின்றார் என்று விளக்கம் கேட்டாரா? அல்லது சுமந்திரன் தவறு விடுகின்றார் என விளக்கம் கேட்டாரா? தவறுகள் கடந்த காலங்களில் எல்லாம் நடந்தவைதான். நாங்கள் இனியும் திருந்தவில்லை என்றால் பலனில்லை. தமிழ் தலைவர்களில் எனக்கு நம்பிக்கை யில்லை. ஒரு வருடத்திற்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி சொல்கிறார். இவர்கள் விழுந்தடிக்துக் கொண்டு பேசுவோம் என்கிறார்கள். ஆனால் இவர்கள் ஒன்றுபட்டு போய் அங்கு பேசப்போவதில்லை.

ஒரே கட்சியாக இருந்த கஜேந்திர குமார்கொன்னம்பலம், மணிவண்ணன் இன்று இரண்டு கட்சியாகிவிட்டார்கள். இதேபோல் நாளை எத்தனை கட்சிகள், எப்படி, எப்படி உடையப் போகுதோ தெரியாது. ரணிலுடன் பேச முற்பட்டால் சிலர் பேச முடியாது, சிலர் நிபந்தனை போடனும், அப்படி, இப்படி எனச் சொல்வார்கள். நாங்கள் ஒன்றுபட மாட்டோம் என அவர்களுக்கு தெரியும். அதனால் பிரச்சினைக்கு தீர்வு இல்லை.

முன்னாள் போராளிகளுக்கு பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் வழங்க அனுமதி தர வேண்டும் என நாடாளுமன்றத்தில் பேசினேன். ஆனால், அவர்கள் வேறு காரணங்களை கூறி நிராகரித்து விட்டார்கள். போராளிகள் மத்தியில் ஒற்றுமை வராது என சொல்வதற்கு இடம் கொடுக்க முடியாது. ஒற்றுமையாக செயற்படுங்கள்.

அன்று போராளிகளுக்கு உதவி செய்ய போவதாகச் சொன்ன யாழ் ஊடகவியலாளர் இன்று இங்கு இருப்பவர்கள் உதவி செய்ய வருவதை குற்றம் சாட்டுகின்றார். அன்று அவர் உண்மையில் போராளிகளுக்கு உதவி செய்ய சென்றாரா அல்லது தன்னுடைய நலன்களுக்காக சென்றாரா என்பது கடவுளுக்கே வெளிச்சம். - எனத் தெரிவித்தார்.

## விகிதாசாரத் தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பனம் செய்யும் நிகழ்வு நேற்று வவுனியாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பலதரப்பட்ட விடயங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள்ளும் தமிழரசு கட்சிக்குள்ளும் ஒழிக்கொண்டிருக்கின்றன என்பது உண்மை. ஆனால் ஒரு தலைவராக இருக்கின்றவர் வெளிக்காட்டினால் விரைவாக அதன் கட்டமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது ஏனையவர்கள் உள்ளே வந்து அதனை இன்னமும் பிரிவினைக்கு கொண்டு போய் விடுவார்கள். வேறுவழியில்லை உண்மை இருக்கிறது. ஆனால் உண்மையை கூற முடியாமலும் இருக்கிறது.

தனி ஒரு மனிதனால் சிதைக்கப்பட்டு 10 கட்சிகள் உருவாகின. அதனை கேட்க ஏன் ஏனைய கட்சிகள் தவறினார்கள்? அதற்குரிய நடவடிக்கைகளை அங்கே எடுத்திருக்க வேண்டும். அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் செய்தது சரி என்று கூறவில்லை. அவர் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தவர். தனக்கு ஒருவருடன் பிரச்சினை என்பதற்காக காலம் காலமாக தமிழ் மக்களுக்கு ஒரு பிரதிநிதியாக செயற்பட்டு கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியை உடைத்து சென்றமை மகா பிழை. மக்கள் நிராகரித்திருக்க வேண்டும்.

தற்போதுள்ள விகிதாசார முறை தேர்தல் இல்லாவிட்டால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர். விகிதாசார முறை இல்லாவிட்டால் இன்று நான்தான் நாடாளுமன்ற உறுப்பினர்.

இங்கு வவுனியாவில் மூவாயிரம் வாக்கு பெற்றவரும் எம்.பியாக இருக்கிறார்.

எழுபது வருடமாக நடக்கின்றது. எழுபது வருடங்களாக தலைவர்கள் தோற்றதல்ல, அவர்கள் தங்களுடைய காலத்தில் எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ முயற்சியெடுத்தார்கள். சங்கிலியனும் எடுத்தார். பண்டாரவன்னியனும் எடுத்தார். தலைவரும் எடுத்தார். அப்போ அது தோற்றதா? இல்லை. யாரும் தோற்கவில்லை. அவர்கள் விட்டு போக, மற்றவர்கள் தொடர வேண்டும்.

பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் எதுவும் தரமாட்டார்கள் என்பதனை முழுமையாக அறிந்து கொண்ட ஒரேயொருவர் அதுதான் தலைவர்.

ஒருவர் மற்றவருடைய இயலாத்தன்மையை அறிந்து தான்தோன்றித்தனமாக நடக்கும் போது கூட்டாக இருந்த கட்சிகள், தலைமைகள் அதனை இறுக்கமாக கையாண்டிருக்க வேண்டும். இவ்வாறு நான் பேசுவதில்லை. நீங்கள் கூறிய படியால் மறுமொழி தர வேண்டி இருக்கிறது. அது தான் கூறினேன். அவர் எனக்கு நண்பர். எங்களுக்குள் வாக்குவாதம் இல்லை. ஆனால் இது தான் உண்மை நிலை.

இன்று ஏதோ ஒரு வழியில் நாங்கள் தமிழ் மக்கள், கட்சிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதற்கு ஓரிருவர் எதிர்ப்பாக இருந்தால் அதனை நாங்கள் சிந்தித்து, ஆராய்ந்து கையாள வேண்டும். அதனை விட்டுவிட்டு சம்பவம் நடைபெற்றதன் பின்னர் நாங்கள் அதை பற்றி தான் கதைக்கின்றோம். அதனை என்ன செய்ய வேண்டும் என்பதை கூறவில்லை. என்னுடைய மனதில் பட்டதனை கூறியிருக்கின்றேன். முயற்சிகள் வெற்றியளிக்கும். அனைவரும் ஆதரவு தருவார்கள். இதன் மூலம் பலவிடயங்களை ஒருங்கிணைக்கலாம்.

இவ்வளவு காலமும் இருந்தது ஒவ்வொருவரும் தனித்துவமாக இயங்கி கொண்டிருந்தார்கள். இனிமேல் இதனை பொதுவாக அரசியல் கலப்புக்கள் இல்லாமல் நீங்கள் உங்களுடைய போராளிகளின் நன்மை கருதி, அவர்களுடைய வாழ்வாதாரங்கள், வாழ்விற்கான, அவர்களை மேம்படுத்துவதற்கான வேலைகளை நாங்கள் பொதுமக்கள் செய்து கொடுக்க வேண்டும், செய்ய வேண்டும், நான் செய்வேன். - என மேலும் தெரிவித்தார்.

## யாழில் 'முதல்வர் கிண்ண'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்ட நிலையில், சீரான முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்புகள் இன்மையால் இடைநிறுத்தப்பட்டன.

யாழ் மாநகர சபை முதல்வர், வி. மணிவண்ணனினால் இந்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இம்மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் முதல்வர் கிண்ணத்துக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தப் போட்டிகள் ஏழு பிரிவுகளாக இடம்பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல்வர்

கிண்ணம் வழங்கப்படுவதோடு, பங்குபற்றியோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும்

வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது. நுழைவுக் கட்டணமாக 500ரூபா செலுத்தி போட்டிகளில் பங்குபற்றுவதற்கான அனுமதியைப் போட்டியாளர்கள் முற்கூட்டியே பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 08.30மணிக்கு போட்டிகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் பங்குபற்றுவதற்கு ஆர்வத்துடன் வருகை தந்திருந்தனர்.

5வயது முதல் 16வயதுக்கும் மேற்பட்டவர்கள் வரை போட்டியாளர்கள் பங்குபெறலாம் என அறிவிக்கப்பட்டமையால் சிறிய வயதுப் பிரிவினரின் பெற்றோரும் போட்டி நடைபெறும் இடத்துக்கு முன்பாகக் கூடியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

காலை 08.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்ட போட்டிகள் முற்பகல் 11மணி வரையும் ஆரம்பமாகாமல் இருந்தமையால் பெற்றோர் மத்தியில் குழப்பநிலை உருவானது. ஏற்பாட்டாளர்கள், நடுவர்களுடன் பெற்றோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது. பின்னர் போட்டிகள் ஆரம்பமாகி பிற்பகல் 04.30மணிவரை இடம்பெற்றிருந்தன. நேர தாமதத்தினால் பிள்ளைகளை அழைத்து வந்த பெற்றோர் அதிருப்தியுடன் வெளியேறியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இரண்டாம் நாளான நேற்றைய தினம் போட்டிகளுக்காக போட்டியாளர்கள் வருகை தந்திருந்த போது, முதல்நாள் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அறிவித்தல் பலகையில்தவறாகக்காண்பிக்கப்பட்டன எனக் கூறி குழப்பநிலை உருவாகியது. போட்டிகளும் உரிய நேரத்துக்கு ஆரம்பமாகாமல் தாமதமாகியிருந்தது. மேலும் நடுவர்களுடனும் ஏற்பாட்டாளர்களுடனும் போட்டியாளர்கள், பெற்றோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து போட்டிகள் இடைநிறுத்தப்படுகின்றன

(13ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## யாழில் 'முதல்வர் கிண்ண'...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

என ஏற்பாட்டாளர்கள் சார்பில் அறிவிக்கப் பட்டது. இதனால் அங்கு மேலும் குழப்ப நிலை உருவானது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த போது பின்வரும் விடயங்கள் தெரிய வந்தன:-

போட்டிகளுக்கான அனுமதிகள் 10 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவித் திருந்தும், போட்டியின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் காலையும் அனுமதி கள் வழங்கப்பட்டிருந்தன என்று கூறப்படு கின்றது.

அனுமதிக் கட்டணங்களும் குறித்த இடத்திலேயே பெற்றுக் கொள்ளப்பட்டமை யால் தாமதம்

ஏற்பட்டது. இதனால் போட்டியாளர்க ளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது டன், குறித்த தினத்துக்கு முன்னர் அனு மதி பெறாத பலரும் போட்டிகளில் கலந்து கொள்ள வந்திருந்தனர். மேலும், போட்டி ஒழுங்கமைப்புகள் யாழ் மாநகரசபை எல் லைக்குள்பட்ட துறைசார்ந்த வேறு தனி யார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டி ருந்ததாக அறியமுடிகின்றது. அவர்களி னால் வயதுப் பிரிவினர்களுக்கு ஏற்ற முறையில் ஒழுங்குபடுத்தல்கள் மேற் கொள்ளப்படவில்லை.

சதுரங்க விளையாட்டுக்கான மாவட்ட ரீதியில் கட்டமைப்புகள் இருந்தும் அவற் றின் பங்களிப்புப் பெறப்படதாகத் தெரிய வில்லை.

போட்டிகள் நடைபெறுவதற்கான வகுப்பறைகள், போட்டித் தேர்வுகள் என் பவை சரிவர ஏற்பாடு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக பல நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் பங்குபற்றும் நிலையில் சரியான ஒழுங் குபடுதலும் மாநகரசபையினால் சரியான மேற்பார்வையும் செய்யப்படவில்லை. அத்துடன் குறித்த நிறுவனத்தின் பதிவேற் றும் நடமுறையில் சிக்கல் நிலை ஏற்பட்ட தாகவும் அறியமுடிந்தது.

மேலும், போட்டிகள் நடைபெறுகின்ற இடங்களில் நடுவர்களின் நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகின்றது. போட்டியாளர் களின் பெற்றோர் போட்டிகள் நடைபெறும் இடங்களில் குழுமியிருந்தனர். இதற்கு மாநகர சபை முதல்வர் மற்றும் அவர் சார்ந்த ஏற்பாட்டாளர்களால் அனுமதியும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் பெருமளவு பணம் இந்தப் போட்டி மூலம் சேகரிக்கப்பட்டிருப்பதாக வும், வெளியிடங்களிலிருந்து அனுசர ணைகள் கோரப்பட்டிருப்பதாகவும் தெரி விக்கப்படுகின்றது. இதனால் அங்கு கூடி யிருந்த பெற்றோரில் சிலர்வ்பணம் சேக ரிக்கப்பட்ட பின்னர் போட்டிகள் இடை நிறுத்தப்படுவது தொடர்பில் கேள்வியெ முப்பினர்.

நேற்றையதினம் போட்டிகள் இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டமை யால் மாநகரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் இவ்வாறு ஒழுங்குமுறையற்ற தன்மை காணப்ப டுவதாக குழப்பநிலை ஏற்பட்டது.

மேலும், இந்த விடயம் தொடர்பில் யாழ் மாநகரசபை விளையாட்டுத் துறைக் குழு சார்ந்தவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

போட்டிகள் திறம்பட நடாத்தி முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமா கவே மேயரின் முடிவுக்கமைய அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் விரைவாக மீண்டும் போட்டிகளை

நடாத்துவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள மேயரால் பணிக்கப்பட்டுள் ளது. விரைவில் போட்டிகள் நடைபெறும் புதிய திகதிகள் அறிவிக்கப்படும். எந்தவித இடையூறுகளுமின்றி போட்டிகள் நடை பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'சாம்பலில் இருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களை தொடர்ந்து நடத்துவதை பொதுஜன பெரமுன தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தி, கட்சியை மறுசீரமைக்காமல் கட்சி மாநாட்டை நடத்துவது தற்போதைய நிலையில் பொருத்தமற்றது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க உட்பட பெரும்பாலான சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்தியமையைத் தொடர்ந்து கட் சிக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் போராட்டத்தை தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன செயற்பாட்டு ரீதியான அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்திருந்த நிலையில் கடந்த மாதம் பொதுஜன பெரமுனவின் முதலாவது கூட் டம் களுத்துறை நகரில் 'களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நாவலபிட்டிய, புத்தளம் ஆகிய நகரங்களில் கட்சி கூட்டங்கமள் இடம் பெற்றன.

எதிர்வரும் மாதம் கம்பஹா மாவட்டத் தில் கூட்டத்தை நடத்த பொதுஜன பெர முன தீர்மானித்தது. அரசியல் ஆதரவாளர் கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்க ளுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக் காமல், கட்சியை முன்னிலைப்படுத்தி கூட் டங்களை நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான பிரசன்ன ரணதுங்க, கம் பஹா மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கூட்டத்தை நடத்த இடமளிக்க போவதில் லைஎனப்பகிரங்கமாகக்குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் கட்சி கூட் டத்தை தொடர்ந்து நடத்துவது சாதகமாக அமையாவது என கருதி பொதுஜன பெரமுன நாடளாவிய ரீதியில் நடத்த திட்ட மிட்டிருந்த கூட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

## அதிகாலை வேளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டின் கதவுகளை வாள்களால் தாக்கியும் கற்களால் எறிந்தும் சேதப்படுத்தியுள்ளார்.

அந்த வீட்டில் தனிமையில் இருந்த வயோதிபத் தாய் ஒருவர் மிகுந்த அச்சம் கொண்டு அயலவர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

நேற்றைய தினம் இரு குடும்பங்க ளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கல்வியற்கல்லூரி மாண வர் ஒருவரே வாளுடன் வந்து அச்சுறுத்தி னார் என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின் றனர்.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## 'ரி20' - உலக கிண்ணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதிக் கொண்டன.

நாணய சுழற்சியை வென்ற இங்கி லாந்து அணி முதலில் பந்துவீச தீர்மானித் துள்ளது.

அதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்ப்பில் ான் மசூட் அதிகபட்சமாக 38 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் சாம் கரண் 12 ஓட்டங்க ளுக்கு 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

அதனடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு 138 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கி லாந்து அணி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி சார்ப்பில் பென் ஸ்டேக்ஸ் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங் களைபெற்றுக் கொண்டார்.

அதனடிப்படையில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி 2022 ஆம் ஆண்டின் உலக கிண்ணத்தை வெற்றுள்ளது.

## பெண் பொலிஸின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த இரு பெண்களையும் கைது செய் யுமாறு கூறி அங்கிருந்த இரு பெண் பொலிஸாரின் கழுத்தைப் பிடித்துத் தள்ளி மோசமாகச் செயற்பட்ட பொலிஸ் உயர் அதிகாரிக்கு எதிராகவே இவ்வாறு விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னகோனின் உத்தரவின் பேரில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

# ஸ்ரீதர் தியேட்டர் இருளில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.14

ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலக மான ஸ்ரீதர் தியேட்டரிற்கு 1998ஆம் ஆண்டு முதல் மின்சாரக் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை என்பதனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.தலைவரும் அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா தனது அலு வலகமாக தொடர்ந்து பயன்படுத்திவரும் ஸ்ரீதர் தியேட்டருக்குகான மின் இணைப் புக்கான கொடுப்பனவுகள் 1998ஆம் ஆண்டு ஒகடோபர் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் செலுத்தப்படவில்லை.

இவ்வாறு செலுத்தப்படவேண்டிய தொகைக கான மின் இணைப்பின் தியேட்டரிற்கான கணக்கிலக்கமான 1698170408 இன் மீதி 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதம் காணப்பட்டதாகவும், 2014 ஆம் ஆண்டிற்கு பின்பு தற்போது 2022 ஆம் ஆண்டுவரையில் மாத சிட்டைக்கான கொடுப்பனவு மட்டுமே செலுத்தப்படும் நிலையில் நிலுவைப் பணம் செலுத்தவில் லை என இ.மி.சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு செலுத்தாத 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதத்திற்கும் தற் போது 8 ஆண்டுகால வட்டிப் பணத்து டன் ஒரு கோடி ரூபாவை நிலுவை தாண் டியதன் அடிப்படையிலேயே தற்போது மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டுள் ளது.

# முன்னாள் போராளிகள் நலன்புரி சங்க அங்குரார்ப்பண நிகழ்வு வவுனியாவில்!





வவுனியா, நவ. 14

நாட்டிலுள்ள அனைத்து முன்னாள் போராளிகளையும் ஒன்றினைத்து செயற் படுவதற்காக முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் எனும் ஒன்றை அங் குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் , ஜனாதிபதி சட்டத்தரணியும் கொழும்பு தமிழரசு கட்சி யின் தலைவருமான கே.வி.தவராசா, யாழ் மாநகர மேயர் மணிவண்ணன், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் செ. மயூ ரன், சிரேஷ்ட விரிவுரையாளர் பரந்தா மன் மற்றும் முன்னாள் போராளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அங்குரார்ப்பண நிகழ்வில் முன்னாள் போராளிகள் ஒன்றிணைவதில் உள்ள சட்டச்சிக்கல்கள், முன்னாள் போராளிக ளின் அரசியல் பிரவேசம், தற்போது அங் கம் வசிக்கும் தமிழ் கட்சிகளின் நிலமை, போராளிகளின் நலன்சார்ந்து செயற்படு வது, புலம்பெயர் உதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்து ரையாடப்பட்டது.

## இன்று ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 வரவு - செலவுத் திட்டம், மூலதனச் சந்தை, ஏற்றுமதிச் சந்தை, தொழிலாளர் சந்தை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன், சமூக சந்தைப் பொருளாதாரத்தின் ஊடாக வரவு - செல வுத் திட்ட இலக்குகளை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சமூக நலன்கள், கட்டாயம் தேவைப்படும் மக்களுக்கு வழங்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தனியார் துறையை கட்டி யெழுப்புவதற்கான கொள்கை பின்பு லத்தை உருவாக்குவது குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்.

## சரத் வீரசேகராவும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்ட தேசிய உணவுப் பாது காப்புத் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனத் தெரிகின்றது.

## வெளிநாட்டுப் பயிற்சிக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டார் என்பது குறித்தே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இது தொடர்பில், வெளிநாட்டு பயிற்சிக் குக் கடற்படையினரைத் தெரிவு செய்பவர் களை இலஞ்ச ஊழல் பற்றிய குற்றச்சாட் டுகள் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு விசாரணை செய்யவுள் ளது.

எனினும் இந்த விசாரணைகள் குறித்து அதிகாரிகள் கனத்த மௌனம் காக்கின்றனர். யோஷித ராஜபக்ஷ பிரிட் டிஸ் கடற்படையின் டார்ட்மவுத்தில் பயிற்சி பெற்றிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாம்!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்



கடந்தகால கசப்பான விடயங்களிலிருந்து மீள்வதற்கு தமிழர்களுக்கு மீண்டும் ஓர் அதியுச்ச அளவிலான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்துக்குள் தீர்வு காண்பதற்காக அந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தரப்புடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வைப்பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதில் மிகமுக்கியமானது இந்திய, இலங்கை ஒப்பந்தமாகும்.

துரதிஷ்டவசமாக தமிழ்த் தலைவர்களும் விடுதலைப்புலிகளும் அதனை எதிர்த்தார்கள். அதன்விளைவால் தமிழ் சமூகம் முப்பது ஆண்டுகள் பின்னடைவைச் சந்திக்குமளவுக்கு நிலைமைகள் மோசமடைந்து விட்டன.

இவ்வாறான நிலையில், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை தற்போதுள்ள தமிழ்த் தலைவர்களாவது சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது.

சமகால நிலைமைகளின் பிரகாரம், தென்னிலங்கையில் உள்ள தலைவர்களில் விடயங்களை நடைமுறைச் சாத்தியமாக்கக்கூடிய அளவிற்கும், குறைந்தபட்ச நியாயத்துடனும் அணுகுமுறைகளைச் செய்யவல்ல ஒரேதலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார்.

இதன் காரணத்தாலேயே, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின்போது ஈ.பி.டி.பி. தாமாக முன்வந்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது.

எம்மைப்பொறுத்தவரையில், நெருக்கடியான நிலைமைகளில் பதவியைப் பெற்றுக்கொண்ட அவரை முழுமையாக ஆதரித்து தோள்கொடுத்தோம். அதன் ஊடாக எமது மக்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும் என்று நம்பிக்கையும் கொண்டிருந்தோம்.

அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே, பகிரங்கமான அறிவிப்பை விடுத்துள்ளார். இதனைவிட தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அமைச்சரவை உபகுழுவொன்றையும் அமைத்துள்ளார்.

அந்த வகையில், தற்போது ஏற்பட்டுள்ள சூழல் தமிழர்களுக்கு மிகச்சாதகமானதாக உள்ளதென்பதே எமது நிலைப்பாடாகும். இவ்வாறானதொரு சூழல் எதிர்காலத்தில் ஏற்படுமா என்பதையும் கணிக்க முடியாது.

ஆகவே, இந்தச் சூழலே அதியுச்ச சந்தர்ப்பமாக தமிழ் மக்கள் கொள்ளவேண்டும். குறிப்பாக, எதிர்ப்பு அரசியலைச் செய்து வருகின்ற தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதனடிப்படையில் அவர்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

நாம், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதையே நோக்காக கொண்டிருக்கின்றோம். சந்தர்ப்பங்கள் கிடைக்காது விட்டால் சந்தர்ப்பங்களை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்துவதும் எமது மூலோபாயமாகும்.

அந்தவகையில், ஜனாதிபதி ரணிலை ஆதரித்ததன் மூலம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்துள்ளோம். தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனைப் பயன்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் முயல்வோம். – என்றார்.

# யாழ். பல்கலை – பங்குப் பரிவர்த்தனை இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை!











யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் 12 ஆம் திகதி, சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அவை அறையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதிமுகாமைத்துவத் துறையும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் இணைந்து எதிர்காலத்தில் நிதிமுகாமைத்துவ மாணவர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான ஏற்பாடுகளுடன் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சார்பில், அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜீவ பண்டாரநாயக்கவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

நிகழ்வின் போது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சட்ட அலகின் தலைவர் றேணு ரணதுங்க, யாழ். கிளை முகாமையாளர் எஸ். சபாநந்தன், சிரேஷ்ட சந்தைப்படுத்தல் பிரதித் தலைவர் நிரோஷன் விஜேசுந்தர, கிளை வலையமைப்பு முகாமையாளர் நிஷாந்த பட்டேகல மற்றும் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஷானிகா ராமநாயக்க ஆகியோரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதிமுகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர். யோகேந்திர்ராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி,

1. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதிமுகாமைத்துவத்துறையினால் ஒருங்கமைக்கப்படும் முதலீட்டுச் சந்தை தொடர்பான மேம்படுத்தல் நிகழ்வொன்றை நடத்துவதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை வருடாந்தம் ரூபா 200,000.00 நிதிப் பங்களிப்பை வழங்கும்.

2. ஒவ்வொரு ஆண்டிலும், நிதிமுகாமைத்துவ சிறப்புக் கற்கைநெறியில் அதியுயர் மதிப்பெண்ணைப் பெறும் மாணவன் அல்லது மாணவிக்கு கொழும்புபங்குப்பரிவர்த்தனையினால் விருதொன்று வழங்கப்படும்.

3. நிதிமுகாமைத்துவத் துறை மாணவர்களின் கற்றல் மற்றும் உள்ளகப் பயிற்சி நடவடிக்கைகளில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும், நிதிமுகாமைத்துவத் துறையும் இணைந்து செயற்படுதல். இயலளவிலான வெற்றிடங்களுக்கு அமைய கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிதிமுகாமைத்துவத் துறை மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும்.

4. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வாணிப இணைப்பு அலகுக்கும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும் இடையிலான கூட்டு நடவடிக்கைகளுக்கென நிதிமுகாமைத்துவத் துறையினால் இணைப்பாளர் ஒருவரை நிமித்தல்.

5. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் நடாத்தப்படும் நிதிச் சந்தையியல் உயர் தகைமைச் சான்றிதழ் (Advanced Diploma in Financial Markets) கற்கை நெறிக்கான வளவாளர்களை வழங்குவதற்கும், கற்கை நெறிக்கான விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்குமான ஆதரவை நிதிமுகாமைத்துவத் துறை வழங்குதல்.

6. நிதிமுகாமைத்துவத் துறையினால் முதலீட்டுச் சந்தை தொடர்பான கற்றல் நடவடிக்கைகளுக்காக செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகளை நடாத்துவதற்கு இரு தரப்பாரும் இணங்கி – இணைந்து செயற்படுதல்.

7. முதலீட்டுச் சந்தை தொடர்பான கற்றல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுதல்.

ஆகிய முக்கிய உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2022இல் வெளியிடப்பெற்றது.